
கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
மாதம் இருமுறை
14-10-1973
40 காசு



வாழ்க்கை உணர்ச்சி மயமானது




'க்ளிக்' அடித்துவைப்பீர்..நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்— நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.

விலை ரூ. 56.25 (எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).



தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லிவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

AGI


ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை

® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லிவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க்.

Agfa®

ஆக்பா க்ளிக்— இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.

Simoes/AG/18C Tam



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — பாரதியார்


கோகுலம்

மலர் 2 : இதழ் 14
அக்டோபர் 14, 1973
பிரமாதீச, புரட்டாசி 28



அட்டையில் :
சோப்புத் தண்ணீர் நுரையெடுத்துப்
பூப்பூ என ஊதிடுவாய்
பாப்பா உனக் கேன்குமிழ்
பறந்து வரக் காரேணும்?

வண்ணப்படம் : வித்யாவரதா



சந்தா விவரம் :

உள் நாடு :
ஒரு வருடம் ... ரூ. 10—00
ஆறு மாதம் ... ரூ. 5—00

இலங்கை :
ஆண்டுச் சந்தா : ரூ. 15—00
(இலங்கை நாணயப்படி)

பிற நாடுகள் :
ஆண்டுச் சந்தா ரூ. 25—00


★

மானேஜர், கோகுலம்
கண்ணப் பூங்கா, சென்னை-600031

பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்த வாரியார்





குளம் வெட்டிய குணநிதி

திருநாளைப் போவார் என்ற அடியவர் ஆதனூரில் வாழ்ந்தார். இவருடைய இயற்பெயர் நந்தனார். இவர் புலயர் குலத்தில் பிறந்தவர். இடையறாத அன்பும், அடக்கமான பண்பும் படைத்தவர்.

இளமையிலிருந்தே ஆலயங்களுக்கு வார், தோல், நரம்பு, கோரோஜனம் முதலியவைகளை வழங்கி, தம்புராவை மீட்டிப் பாடியும், ஆடியும் சிவனடியை நாடியும் பக்தி புரிந்து வந்தார்.

ஒருநாள் திருப்புன்கூர் என்ற சிவத் தலத்தை யடைந்தார். அங்கு இடபம் உயரமாக இருந்தபடியால் சிவலிங்கம் தெரியவில்லை.

இறைவனை நோக்கி அழுதார்; தொழுதார். ''ஐயனே! இந்த மாடு சற்றே விலகாதா? இது மாடு அன்று, பாவியேன் பல காலம் செய்த பாழ்வினை குவிந்த மலைபோல மாட்டு வடிவில், உன்னை மறைத்துளது'' என்று கூறி முறையிட்டார்.

சிவபெருமான் விடையை விலகச் செய்து காட்சியளித்தார். நந்தனார் சிவதரிசனத்தைச் செய்தார். ஆடினார் பாடினார். கண்ணீர் சொரிந்தார்.

திருக்கோயிலை வலமாக வந்தார். மேல் திசையில் ஒரு குட்டையைக் கண்டார். இதனைக் குளமாக வெட்டினால் பலருக்குப் பயன்படுமே என்று எண்ணினார். குளம் வெட்டப் பணத்துக்கும் ஆட்களுக்கும் எங்கே போவார்? அவரோ பரம ஏழை.

அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற விநாயகர் கூலியாளாக வந்தார். வேதங்களும் காணாத பாதங்கள் நிலத்தில் தோய, அழுக்குத் துணியுடுத்து ஒரு தேய்ந்த மண் வெட்டியைத் தோளில் வைத்து, தலையில் ஒரு கூடையைக் கவிழ்த்து நந்தனாரின் எதிரில் வந்து நின்றார்.

நந்தனார், ''ஆரப்பா?'' என்றார்.

விநாயகர், ''நான் உன் ஆளப்பா'' என்றார்.

என்ன கருணை? மறைகளுக்கும் எட்டாத அப்பரம்பொருள் நந்தனுக்கு ஆட்காரன் என்று கூறிக் கருணை புரிந்தார்.

நந்தனார் இந்த வசனத்தைக் கேட்டு அதிசயம் அடைந்தார். 'நானே ஒருத்தருக்கு அடிமை. அடிமையாகிய எனக்கும் ஒரு ஆள்காரனா?'

''அப்பா! இந்தக் குட்டையைக் குளமாக வெட்டுவையோ?'' என்றார்.

விநாயகர் ''அது எம்மட்டும்'' என்றார். 'எவ்வளவு ஆழம் வெட்ட வேண்டும்' என்று கேட்கும் வாயிலாக.

நந்தனார் ''குளம் எவ்வளவு நீளமோ அவ்வளவு ஆழம் வெட்ட வேண்டும்'' என்றார்.

விநாயகர், ''இது பெரிய பணி. அப்படி வெட்டினால் கூலி என்ன தருவாய்?'' என்று கேட்டார்.

நந்தனார் ''பதக்கு நெல் தருவேன்'' என்றார். பதக்கு என்றால் ஐந்து படி.

விநாயகர் ''போதும், போதும். என் புண்ணியம்'' என்றார். நந்தனார் கோயிலை வலம் வருவதற்குள் திருக்குளத்தை வெட்டிவிட்டார்.

அவ்வாறு விநாயகர் வெட்டிய திருக்குளம் இன்றும் திருப்புன்கூரில் காட்சி தருகின்றது.

என்னே விநாயகருடைய கருணைத் திறம்? எளிமையாக வந்து அருள் புரிகின்ற கருணைத் தெய்வம் விநாயகர்.

மற்ற மூர்த்திகளை வழிபடுவதாயின் மூர்த்திகட்கு கண் மூக்கு, கை கால் என்ற அங்கங்களைச் சிற்ப நூல் விதிப்படி அமைக்க வேண்டும்.

விநாயகருக்குக் கண் மூக்கு கால் கை ஒன்றும் அமைக்க வேண்டாம். மஞ்சள் அல்லது சாணம் என்பவைகளால் உருட்டி வைத்தால் பிள்ளையார். வெகு சுலபமாகப் பிள்ளையாரைப் பிடித்து வைத்துப் பக்தி பண்ணலாம். அறுகு எடுத்து அப்பரமபதியின் அருகில் சென்று சாத்தினால் முத்தி அருகில் வரும். மாலயனுக்கும் எட்டாத விநாயகர் அடியார்கட்கு எளியவனாக வந்து தண்ணருள் புரிவார். அவருடைய ஆலயத்தை ஒருமுறை வலம் வந்தால் போதும். கேட்ட வரம் தருவார். வேண்டிய வளம் பெருகும். வினை கருகும். திருவும் கல்வியும் சீரும் தழைக்கும்.

(தொடரும்)



தேசதேசக் கதைகள்: எகிப்து

மந்திரவாதிக் குழந்தை

வாண்டு மாமா

உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டுக்கள் உள்ள நாடு எகிப்து என்று உங்களுக்கெல்லாம் தெரியும். நைல் நதிக் கரையோரமுள்ள எகிப்து நாடு பழைமையான நாகரிகங்களைக் கொண்ட புராதனமான நாடு. அந்த நாட்டை ஆளுபவர்களுக்குப் 'பாரோக்கள்' என்று பெயர். மன்னர் என்பது தான் அதன் பொருள்.

ஒரு சமயம் பாரோ தம் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தார். அரசவை கூடி இருந்தது. எகிப்திலிருந்து வெகு தூரத்திலிருக்கும் நூபியா என்ற தேசத்திலிருந்து ஒருவன் வந்திருந்தான். வந்திருந்தவனின் உயரம் ஏழடி. அவன் கையில் ஓர் ஓலைச் சுருள் இருந்தது. அவன் பாரோவின் முன்னால் வந்து ''மன்னவனே, உங்கள் எகிப்து நாடு புகழ்பெற்ற மந்திரவாதிகளைக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அத்தகைய மந்திரவாதிகளில் யாராவது இந்த ஓலைச் சுருளைப் பிரிக்காமல் இதில் எழுதியுள்ள செய்தியைக் கூற முடியுமா? முடியாவிடில் எங்கள் நாட்டு மந்திரவாதிகள்தான் உலகிலேயே மிகச் சிறந்தவர்கள் என்பதாக நூபியா அரசர் உறுதி செய்வார். நூபியா நாட்டு மந்திரவாதிகளில் ஒருவனை நான் அவர்களின் தலைவன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்'' என்றான் அந்தத் தூதுவன்.

பாரோ அமைதியாக ''எங்கள் நாட்டு மந்திரவாதிகளை அழைக்கிறேன். அவர்களில் ஒருவர் இதைப் பிரிக்காமலே படிப்பார். அதுவரை நீ அரண்மனையின் விருந்தினர் மாளிகையில், உண்டு உறங்கி ஓய்வு பெறு'' என்றார்.

நூபிய மந்திரவாதி கர்வத்துடன் சிரித்தபடியே விருந்தினர் மாளிகைக்குப் போனான். முத்திரையிடப்பட்ட ஓலைச்



சுருள் மன்னர் முன்னே ஒரு சிறு பீடத்தில் வைக்கப்பட்டது. பாரோ தம் நாட்டு மந்திரவாதிகளை வரவழைத்து விஷயத்தைக் கூறினார். முத்திரையிடப்பட்ட ஓலைச் சுவடியைப் பிரிக்காமல் அதில் உள்ளதைக் கூறும் திறமை அவர்களில் யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. பாரோவின் மகன், பட்டத்து இளவரசன், மந்திர தந்திரங்களைக் கற்றவன்தான். அவனாலும்கூட இதில் வெற்றி காண முடியவில்லை.

இளவரசன் தன் அரண்மனைக்குப் போனான். அங்கு அவனுடைய பன்னிரண்டு வயது மகன் அவனை எதிர்கொண்டான். பெரிய மன்னரின் பேரன் அவன். தன் அப்பாவின் கவலை சூழ்ந்த முகத்தைக் கண்டான். அதன் காரணமான செய்தியை முன்னாலேயே அவன் அறிந்திருந்தான். ''கவலைப்படாதீர்கள் அப்பா. நானும் கொஞ்சம் மந்திரங்களையெல்லாம் கற்றுக் கொண்டிருக்கிறேன். எனக்கு அவைகளைக் கற்றுத் தந்தவர், நம் கடவுளர்களிலேயே மிக அறிவாளியாகிய தோத் ஆவார். தர்த்தாவின் அவையில் நடந்தது அவ்வளவையும் நான் இங்கிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன். அத்தகைய சக்தி எனக்கு இருக்கும்போது முத்திரையிடப்பட்ட அந்த ஓலைச் சுருளில் இருப்பதையா அறிய முடியாது? அந்த நூபியனின் சவாலை ஏற்க நாளைக்கு நான் அவைக்குப்போகிறேன், அனுமதியுங்கள்'' என்றான் குட்டி ராஜ குமாரன். பட்டத்து இளவரசனுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. பெருமையாகவும் இருந்தது.

மறுநாள் பாரோ தம் அவையைக் கூட்டினார். நூபியா தேசத்து தூதுவனாகிய மந்திரவாதி வரவழைக்கப்பட்டான். பாரோ கூறினார், ''அறிவாளிகள் நிறைந்த நாடு எங்கள் நாடு. முத்திரையிடப்பட்ட உன்னுடைய ஓலைச் சுருளைப் பிரிக்காமலே படிக்க ஒரு பன்னிரண்டு வயதுப் பாலகனே போதும்.''





நூபியன் ஏளனமாகச் சிரித்தபடி ''பாலகனே படிக்கட்டும்'' என்றான். அவனுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் சற்றைக்கெல்லாம் அவன் முகத்தில் கலவரமும், வியப்பும் திகைப்பும் கலவையிடலாயின, குட்டி ராஜகுமாரன் பேச ஆரம்பித்ததும்.

''முத்திரையிடப்பட்ட உன்னுடைய ஓலைச் சுருளினுள்ளே ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் உங்கள் நூபியாவில் ஒரு மந்திரவாதி இருந்தான். அவன் மிகவும் பிரபலமானவன். எப்படியென்றால் அவன் தன்னுடைய மந்திர வலிமையினால் அப்போது எகிப்தை ஆண்டு வந்த பாரோ மன்னனை ஒரே இரவில் இங்கிருந்து நூபியாவுக்கு அழைத்துப் போய் மறுபடி இங்கு கொண்டு வந்து விடக்கூடிய அத்தனை திறமைசாலி. அப்படி ஒரு தடவை பாரோவை நூபியாவுக்குக் கொண்டு போய் அவரைக்குரூரமான முறையில் சவுக்கால் அடிக்கும்படி செய்தான். அதே ஓலைச் சுருளில் மறுநாள் பாரோ மன்னர் என்ன செய்தார் என்பதையும் கூறியிருக்கிறது...'' என்று தொடரலானான் குட்டி ராஜகுமாரன். சபையில் உள்ளோர் திறந்த வாய் மூடாமல் வியப்பில் மூழ்கிக் கிடந்தார்கள். நூபியாவின் மந்திரவாதியோ கிலியினால் கிரங்கிக் கிடந்தான். சிறுவன் மேலும் ஓலைச் சுருளின் ரகசியத்தைக் கூறலானான்.

''மறு நாள் பாரோ தமது எகிப்திய மந்திரவாதிகளிலேயே தலைசிறந்த ஒருவனைக் கண்டு பிடித்தார். நூபியர்களின் மந்திர சக்தியிலிருந்து காக்கக் கூடியவனாகவும் அதே சமயத்தில் தம்மை நூபியர்கள் எப்படிக் நடத்தினார்களோ அதே போல நூபியா மன்னனையும் பழிக்குப் பழி வாங்கக் கூடிய திறமை மிக்கவனாகவும் அவன் இருந்தான். பழிவாங்கப்பட்ட பிறகு நடந்ததும் உங்கள் ஓலைச் சுருளில் விவரிக்கப்பட்டிருக்கிறது. நூபியா மன்னர் தம்மைத் தம் மந்திரவாதிகள் காக்க முடியாததனால் கடுங்கோபம் கொண்டு அந்த மந்திரவாதியைச் செம்மையாகச் சவுக்கினால் அடித்து அரண்மனையை விட்டே விரட்டி விட்டார். இதில் எழுதப்பட்டிருப்பவை இந்தச் சம்பவங்கள் தான்'' என்றான் குட்டி ராஜ குமாரன்.

''ஓலைச் சுவடிகளில் உள்ளதைச் சரியானபடி சொல்லி விட்டாய்'' என்றான் நூபிய மந்திரவாதி பெரு மூச்சுடன். ''இருந்தாலும் மந்திர தந்திரங்களில் எங்கள் நாடு சிறந்ததா உங்கள் நாடு சிறந்ததா என்பதை நாம் இன்னும் முடிவு செய்யவில்லை. என்னிடம் உன் திறமையைக் காட்டுகிறாயா?'' என்று கேட்டான் நூபிய மந்திரவாதி.

''பாரோ அவர்கள் அனுமதி வழங்கினாரானால் என் திறமையைக் காட்டுகிறேன்'' என்றான் சிறுவன்.

தம்முடைய பேரனுக்கு ஏதாவது அபாயம் நேரிடுமோ என்று பயந்தார் பாரோ. ஆனால் எகிப்தின் கௌரவத்தைக் காக்கத் தம் பேரனுக்கு அனுமதி வழங்க வேண்டியதாயிற்று.

வெற்றி முழக்கத்துடன் ஊர்க்கமாகக் கொக்கரித்தபடி தன் கைவிரலைப் பாரோவின் கால்களை நோக்கி நீட்டினான் அந்த நூபியன். அடுத்த விநாடி பாரோவின் கால்களின் அருகே மிகப் பெரிய ஒரு நாகப் பாம்பு சுருண்டு சுழன்று தோன்றியது. அதன் படமெடுத்த தலை பாரோவின் தலைக்கு மேலே உயர்ந்தது. விஷ மூச்சு விட்டபடி பயங்கரமாகச் சீறிக் கொண்டு எழும்பியது பாம்பு. ஆனால் அடுத்த விநாடியே குழந்தை மந்திரவாதியாகிய குட்டி ராஜகுமாரன் அந்தப் பயங்கரமான பெரிய பாம்பின் வாலைப் பிடித்து இழுத்துச் சுழற்றினான். அது ஒரு பெரிய புழுவைப் போலாகியது. அதை எரிக்கும் வெய்யிலில் வீசி எறிந்து விட்டுக் கூறினான் குட்டி ராஜகுமாரன்: ''இதை விடப் பெரிய புழுவை உன்னால் எங்களுக்குக் காட்ட முடியாதோ?''

அவமானத்தினால் அடிபட்ட நூபிய மந்திரவாதி ஆத்திரத்தினால் வெகுண்டு தனது கைகளை உயரத் தூக்கி ஏதோ மந்திரங்களை உச்சரித்தான். உடனே தர்பார் மண்டபத்தைக் கனத்த காரிருள் சூழ்ந்தது. தன் முன்னால் இருப்பதைக் கூட யாராலும் காண முடியவில்லை. அத்தனை பயங்கரமான இருள்.

குழந்தை மந்திரவாதி சல்லாத் துணியைச் சுருட்டுவது போல் அந்த இருளைத் தன் இரு கரங்களாலும் ஒன்று சேர்த்துத் திரட்டி அழுத்திச் சுருட்டினான். ஒரு பெரிய ஆரஞ்சுப் பழத்தின் அளவுக்கு அவன் கரங்களில் பந்து போல் அந்தக் காரிருள் உருண்டையாகச் சுருண்டு விட்டது. புழுவை எறிந்தது போல் இந்த இருள் பந்தையும் அதையடுத்து வெளியே வீசிய சிறுவன் அமைதியாக, ''இதை விடச் சிறப்பாக உன் திறமையை வெளிப்படுத்தும் செயல்கள் கிடையாதோ?'' என்று கேட்டான்.

தோல்வியினால் துவண்டுவிட்ட நூபியன் பீதியினால் முகம் வெளுத்துக் கிடந்தான். இருந்தாலும் தன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி உரக்க மந்திரங்

களை ஜபித்தான். குபீரென்று தீ கிளம்பியது. கொழுந்து விட்டு எரியும் பயங்கரமான தீ, ஜ்வாலை வீசிக் கொண்டு பாரோவின் சிங்காதனத்தை நோக்கிச் செல்லலாயிற்று. அவையிலுள்ளோர் அக்நியின் தகிப்பைத் தாள மாட்டாமல் பின்னுக்கு ஓடினார்கள். அதன் கொடிய பிடியிலிருந்து யாராலுமே தப்ப முடியாதோ என்று நினைக்கும் அளவுக்கு இருந்தது, அக்நியின் வேகமும் கோபமும்.

குழந்தை மந்திரவாதியோ கைகளை உயர்த்தி ஒரே ஒரு வார்த்தைதான் கூறினான், தனது கணீரென்ற குரலில். அடுத்த விநாடி பாரோவை நோக்கித் தாவிக் கொண்டிருந்த தீ ஜ்வாலை சட்டென்று திரும்பியது. அவைக்கு வெளியேயுள்ள திறந்த வெளியைநோக்கி தீ திரும்பிச் செல்லும்போது வழியில் எதிர்ப்பட்டான் நூபிய மந்திரவாதி. அரண்மனையின் முற்றத்துக்குப் போய்க் காயும் வெய்யிலோடு அந்தத் தீ கலந்து மறைந்த போது நூபிய மந்திரவாதி நின்று கொண்டிருந்த இடத்தில் வெறும் சாம்பல் குவியல் மட்டுமே இருந்தது.

இன்றே பொருளைத் தேடு!

சிறுவன்:
சிற்றெறும்பே சிற்றெறும்பே
சற்று நின்றிடு!

எறும்பு:
சற்றும் நிற்க நேரம் இல்லை
சொல்வ தென்னவோ?

சிறுவன்:
இன்று கோடைத் தென்ற லில்நீ
இங்கும் அங்குமாய்
என்னைப் போலச் சுற்றித் திரிய
ஏன் வரவில்லை?

எறும்பு:
உன்னைக் காக்க உனது தந்தை
உழைக்கின் றாரன்றோ?
என்னைக் காக்க யாரும் இல்லை
என்னைத் தவிரவே!

சிறுவன்:
இன்று இல்லை நாளை யேனும்
இங்கு வருவையோ?

எறும்பு:
என்றும் உன்னைப் போலச் சுற்ற
என்னால் முடியுமா?
கோடைக் காலம் உணவு தேடும்
காலம் அல்லவா?
கூடிச் சென்று தேடி வந்து
கூட்டில் வைக்கணும்!
மாரிக் காலம் வந்தவுடன்
மழையும் வந்திடும்
ஊரைச் சுற்றி உணவு தேடி
உண்ண முடியுமா?
மாரிக் கால வாழ்வுக் காக
முயன்று தேடுவோம்
மாரிக் காலம் வந்த போது
மகிழ்ந்து வாழுவோம்!
என்னைப் போல நீயும் பொருளை
இன்று தேடுவாய்
இன்ப வாழ்வு கண்டு நாளை
இதயம் மகிழுவாய்!

— மன்னை ஜா. ஏ



அதிர்ஷ்டக்கார விறகுவெட்டி

அநிருத்





விறகுவெட்டி ஒருவன் காட்டின் அருகே ஒரு குடிசையைக் கட்டிக் கொண்டு தன் மனைவியுடன் வசித்து வந்தான். வீட்டைச் சுற்றிலும் அழகான காய்கறித் தோட்டம் போட்டிருந்தான். ஒரு நாள் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்த சமயம் கரடியொன்று தோட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்த விறகு வெட்டி விழுந்தடித்துக் கொண்டு ஓடி வீட்டினுள் புகுந்து கதவை மூடிக் கொண்டு விட்டான். ஆனால் வெளியிலிருந்த அவன் மனைவி கரடி வந்ததைக் கவனிக்கவில்லை. திடுதிப்பென்று தன் கணவன் வீட்டினுள் ஓடிப் போய் ஒளிந்து கொண்ட காரணம் அவளுக்கு விளங்கவில்லை. 'வெளியே வாங்க' என்று கூவினாள். ஆனால் அவன் கதவைத் திறந்தால்தானே! பதிலும் வரவில்லை. தன் கை வேலையை முடித்து விட்டு எழுந்தபோதுதான் ஒரு கரடி தன்னை நோக்கி வருவதைப் பார்த்தாள். அவள் பயத்தை வெளிக்காட்டாமல் சடாரென்று மின்னல் வேகத்தில் கையில் வைத்திருந்த கத்தியால் கரடியின் மார்பில் குத்தி அதைக் கொன்றாள்.

பிறகு ''கதவைத் திறந்து வெளியே வாங்க!'' என்று கணவனைக் கூப்பிட்டாள். அவன் பயத்தைத் தெளிய வைத்துக் கதவைத் திறக்கச் செய்தாள். மனைவியின் தீரச் செயலைக் கண்ட அவன் ஆச்சரியப்பட்டுப் போனான். அவளுக்கோ ஏகப் பெருமை. அவள் ஒருத்தியாகவே நின்று அந்தக் கரடியைக் கொன்றாளென்றால் இருக்காதா பின்னே? உடனே அவ்வூர் ராஜாவிடம் சென்று நடந்ததைக் கூறிப் பரிசு பெற விரும்பினாள். ஆனால் தன் கணவனைக் கோழை என்று எல்லோரும் பரிகசிப்பார்களே என்று வருந்தியவள், 'கரடியைத் தன் கணவனே கொன்றான்' என்று சொல்லும்படி செய்தாள்.

ராஜா முதலில் அதை நம்ப மறுத்தார். தம் ஆட்களை அனுப்பி நேரில் கண்டுவரச் சொன்னார். அவர்கள் இறந்த கரடியைப் பார்த்து வந்து சொன்னதும் ராஜா ஆனந்தப்பட்டார். விறகுவெட்டி தம்பதிகளுக்கு அநேக சன்மானங்களைக் கொடுத்ததோடல்லாமல் அவனுக்கு 'கரடியைக் கொன்ற வீரன்' என்ற பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தார். மேலும் அவனைத் தமது பாதுகாப்பாளனாகவும் நியமித்துக் கொண்டார்.

ஒருநாள் ராஜாவிடமிருந்து அழைப்பு வந்தது. 'ஏதோ என்னவோ' என்று பயந்து சென்றான் விறகுவெட்டி வீரன்.

''கரடியைக் கொன்ற வீரனே! நமது அரண்மனைக் கிணற்றினுள் பாம்பு ஒன்று இருக்கிறது. அது தண்ணீர் எடுக்க வருபவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறதாம். அதைக் கொல்ல உன் ஒருவனால்தான் முடியும்'' என்றார் அரசர்.

கவலையோடு வீடு திரும்பிய கணவனுக்குத் தைரியம் கூறி அனுப்பினாள் மனைவி. கிணற்றின் சமீபத்தில் வந்த பிற்பாடுதான் தான் ஆயுதம் ஏதுமின்றி வந்ததை உணர்ந்தான் அவன். 'பாம்பை எப்படிக் கொல்வது?' அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. கிணற்றினுள் எட்டிப் பார்த்தான். பாம்பு கண்ணில் படவில்லை. இன்னும் நன்றாகக் குனிந்து எட்டிப் பார்த்தான். அப்போது அவன் நிலைதடுமாறிக் கிணற்றினுள் விழுந்து விட்டான். உயிர் பிழைக்கப் போராடின அவன் கையில் வேர் ஒன்று சிக்க அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். ஆனாலும் மறு கணமே வேருடன் ஜலத்தில் 'தொப்'பென்று விழுந்தான்.








இவற்றையெல்லாம் மேலே இருந்து கவனித்துக் கொண்டிருந்த அரசனும் மற்றவர்களும் 'சரி, இன்று வீரனின் கதி அதோகதிதான்' என்று முடிவு கட்டி விட்டார்கள். அரசன் தன் சேவகர்களைக் கூப்பிட்டு ஒரு கயிற்றை உள்ளே விடும்படி ஆணையிட்டான். சேவகர்களும் அப்படியே செய்ய, வீரன் கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே வந்தான். அங்கு கூடியிருந்தவர்கள் அவனைப் பார்த்தார்கள். பிறகு அவன் கையைப் பார்த்தார்கள். 'வீல்; என்று அலறி ஓட்டம் பிடித்தார்கள். அவனும் தன் கையைப் பார்த்தான். பீதியினால் அவன் மூர்ச்சை அடைந்து விட்டான். காரணம் வேறொன்றுமில்லை. அவன் கையில் பிடித்துக் கொண்டிருந்தது எல்லோருக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த அந்தக் கொடிய பாம்பேதான்! அவன் பலமாகப் பிடித்திருந்த பகுதி பாம்பின்கழுத்தாகையால் அது அப்போதே உயிர் விட்டிருந்தது. அவன் மேலே வரும்போதும் அது அவன் கையிலேயே இருந்தது. அரசன் அவன் தைரியத்தைப் பாராட்டி அவனுக்கு மேலும் பல பரிசுப் பொருட்களைக் கொடுத்துப் 'பாம்பைக் கொன்ற தீரன்' என்ற விருதையும் அளித்துக் கௌரவித்தான்.

சில தினங்கள் கழிந்தன. மறுபடியும் அரசனிடமிருந்து தீரனுக்கு அழைப்பு வந்தது. 'இந்த முறை நம் தலை எப்படி உருளப் போகிறதோ, தெரியவில்லையே' என்று பயந்த வண்ணம் அரச மண்டபத்துக்குள் சென்றான். அங்கு சில கிராமத்து ஆட்கள் நின்று கொண்டிருந்தனர். ''இவர்கள் உன் உதவியைப்



பெற்றுப் போக வந்திருக்கிறார்கள். இவர்கள் வசிக்கும் கிராமத்தருகே இருக்கும் நதியில் முதலை யொன்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறதாம். அதைக் கொல்ல உன்னைத் தவிர வேறு எவராலும் முடியாது.' உடனே இப்போதே புறப்பட்டுச் செல்'' என்று உத்தரவிட்டான் மன்னன். மன்னன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச முடியுமா? தலை விதியே என்று புறப்பட்டான் தீரன்.

தீரன் கொல்லப் போகும் முதலையைத் தூக்கி வர உதவியாக இருக்கட்டும் என்று நான்கு சிப்பாய்களை அவனுடன் அனுப்பிவைத்தான் அரசன். எல்லோரும் நதியை அடைந்தார்கள். நதியோரம் செடி கொடிகள் ஏகத்துக்கு வளர்ந்திருந்தன. எங்கு பார்த்தாலும் புதர்! புதர்! புதர்தான்! வீரனுக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. சிப்பாய்களிடம் 'நான் முதலை எங்கிருக்கிறதென்று பார்த்து வருகிறேன். அது வரையில் நீங்கள் இங்கேயே இருங்கள். நான் கூப்பிட்டதும் வரலாம்' என்று சொல்லி மேலே நடந்தான். 'நாம் எங்கேயாவது 'கண் மறைவாகி விடலாம்.' சிப்பாய்கள் காத்திருந்து காத்திருந்து நம்மைக் காணாமல், 'சரி, வீரனை முதலை விழுங்கி யிருக்கும்' என்று நினைத்து ஊர் திரும்பி விடுவார்கள். நாம் கண்காணாத வேறு இடத்துக்குச் சென்று நிம்மதியாக வாழலாம்' என்று அவன் மனத்தில் திட்டமொன்று உருவானது. எப்போதும் நாம் நினைத்தபடி யெல்லாம் நடக்கிறதா என்ன?

விறுவிறுவென்று நடந்து கொண்டிருந்த தீரனுக்குக் கால்கள் கெஞ்ச ஆரம்பித்தன. இளைப்பாற நதியோரம் கிடந்த பெரிய மரக்கட்டையின் மீது அமர்ந்தான். என்ன மாயமோ! அந்தக் கட்டை நகர ஆரம்பித்தது. உடனே அவனுக்குத் தெரிந்துவிட்டது. தான் உட்கார்ந்தது மரக் கட்டையல்ல, முதலைதான் என்று! என்ன செய்வது? 'ஆதிமூலமே' என்று ஆண்டவனை வேண்டுவதைத் தவிர வேறு ஏது வழி? புதரில் மறைந்திருந்த முதலை திடீரென்று தன்மீது பாரம் ஏறவே, பயந்து நீரினுள் விரைந்து செல்ல ஆரம்பித்தது. இந்த விசித்திர முதலைச் சவாரியைக் கண்ட கரையோரம் காத்திருந்த நான்கு சிப்பாய்களும் பிரமை பிடித்துப் போய் நின்றுவிட்டனர். மறுகணமே தம்மைச் சமாளித்துக் கொண்டு முதலையைக் குறி பார்த்துச் சுட்டனர். தீரனைக் கீழே உருட்டித் தள்ளிவிட்டு முதலை சுருண்டு விழுந்து உயிரை விட்டது.

செத்து விழுந்த முதலையைக் கண்ட வீரன் தைரியமாக எழுந்தான். பக்கத்திலிருந்த சிப்பாய் ஒருவனைப் 'பளீர்' எனக் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அதிகப் பிரசங்கிகளா! உயிரோடு முதலையைப் பிடித்து அரசரிடம் காட்டலாமென்றிருந்த என்னுடைய திட்டத்தையே தவிடுபொடியாக்கி விட்டீர்களே. மடையர்களா! நீங்கள் முதலையைச் சுட்ட செய்தி தெரிந்தால் அரசர் உங்களைச் சும்மா விட மாட்டார், தெரியுமா? முட்டாள்களா!'' என்று சிப்பாய்களை மிரட்டவே அவர்கள் நடுநடுங்கித் தாங்கள் சுட்டதாக அரசரிடம் சொல்வதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தனர்.

உயிரற்ற முதலையைத் தீரன் இழுத்து வருவதைக் கண்டு ஊரே கூடிவிட்டது. ராஜாவுக்கு உண்டான ஆனந்தம் சொல்லி முடியாது. 'முதலையைக் கொன்ற தீரன்' என்ற விருதையளித்து மரியாதை செய்தான். சூரனுடைய 'சாகஸ'ச் செயல்கள் தேச தேசங்களுக்கும் பரவலாயிற்று.

சில காலம் நிம்மதியாகக் கழிந்தன. அயல் நாட்டரசன் ஒருவன் படை திரட்டிப் போருக்கு வரப் போகிறான் என்னும் சேதி காதுக்கு எட்டியது. 'சரி, வந்தது வினை. கட்டாயம் அரசன் நம்மைப் போருக்கு அழைப்பான். எனவே ஒருவருக்கும் தெரியாமல் ஊரை விட்டு ஓடிவிட வேண்டும். அரசன் கேட்டால் எதிரிகளை விரட்டியடிக்கச் சென்றிருப்பதாகச் சொல்லிவிடு. சில நாட்கள் கழித்து நான் திரும்பா விட்டால் எதிரிகள் என்னைக் கொன்றுவிட்டதாக நினைத்துக் கொள்ளட்டும். கொஞ்ச காலம் தலைமறைவாக இருந்துவிட்டு எல்லாம் அடங்கிய பிறகு வருகிறேன்' என்று தன் மனைவியிடம் சொல்லிவிட்டு இரவோடு இரவாக வீட்டை விட்டுப் புறப்பட்டான் சூரன்.

தன்னை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று காட்டினுள் மறைந்து மறைந்து ஓடத் தொடங்கினான். நடு இரவு நேரம் நெருங்கியது. அருகில் சலசலக்கும் சத்தம் கேட்டது. ஏதாவது துஷ்டப் பிராணியாக இருக்குமோ எனச் சற்று நின்றபோது சூரனின் காதில் மனிதக் குரல்கள் சன்னமாகக் கேட்டன. 'சரி சரி, நம்மைப் பிடிக்கவே அரசன் ஆட்களை அனுப்பி யிருக்கக்கூடும்' என்று எண்ணி அருகிலிருந்த பெரிய மரத்தின் மேல் ஏறிக்கொண்டான். அதே சமயம் மரத்தின் கீழே மூன்று படைவீரர்கள் வந்து உட்கார்ந்து கொண்டனர்.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த சூரனுக்கு அம்மூவரின் பேச்சிலிருந்தும் அவர்கள் எதிரி அரசனும் அவனது படை வீரர்களும் என்று தெரியலாயிற்று. யுத்த முறைகளைப் பற்றித் தீவிரமாக விவாதித்துக் கொண்டனர். எதிரி அரசன், ''நாம் ராஜ்யத்தை முற்றுகையிட்டதும் முதல் காரியமாக அந்த வீரதீரசூரனைக் கொல்ல வேண்டும். இல்லாவிட்டால் ராஜ்யத்தைக் கைப்பற்றுவதென்பது இயலாத காரியம்'' என்றான்.


''ஆமாம்! ஆமாம்! அவன் வீராதி வீரன், அசகாய சூரன், எமகாதகத்திரன் என்று சொல்கிறார்கள். அவன் இங்கு எங்கயோவது ஒளிந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என்று வீரர்களில் ஒருவன் கூறினான். இதைக் கேட்ட சூரனின் கைகால்கள் உதறல் எடுத்தன. ஏற்கனவே ஒடியும் நிலையிலிருந்த பெரிய கிளை அவனுடைய ஆட்டத்தால் ஒடிந்து அரசனின் தலை மேலேயே விழுந்தது. விழுந்த வேகத்தில் அரசன் முதலில் மயக்கமுற்றான். பின்னர் சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் அங்கேயே மடிந்தான்.

கிளையுடன் கீழே விழுந்த சூரனைக் கண்ட மற்ற இருவரும் பயத்தினால் '' நீ யார்?'' என்று கேட்டனர். ''பொடிப் பசங்களா! என்னை யார் என்று தெரியவில்லையா? நான்தான் வீர தீர சூரன்!'' என்றான் கம்பீரத் தோரணையில்.

அவ்வளவுதான்; பேரைக் கேட்டதுமே விழுந்தடித்துக் கொண்டு தமது கூடாரத்துக்கு விரைந்து சென்று மற்றப் படை வீரர்களிடம் நடந்ததைக் கூற அவர்களும் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ஆயுதங்களைக்கூட எடுத்துக்கொள்ளாமல் எடுத்தனர் ஓட்டம். சூரன் அங்கிருந்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தனது ராஜ்யத்துக்குத் திரும்பிச் சென்றான்.

ராஜாவுக்கு அவனை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. தனித்து அவன் ஒருவனே எதிரி அரசனையும் கொன்று அவன் படைகளையும் விரட்டியடித்த அதி வீரச் செயலுக்காக அவனுக்கு மிக உயர்ந்த பதவிகளை அளித்துப் பெருமைப்படுத்தினார்.

இப்படியாகத்தானே அதிர்ஷ்ட தேவதையின் துணையால் விறகுவெட்டி —தப்பு தப்பு—வீராதி வீரன் தன் மனைவியுடன், சகல சம்பத்துக்களுடன் சந்தோஷமாக, வெகு காலம் வரையில் சுகமாக வாழ்ந்து வந்தான்.



அளவைகள் தோன்றியது எப்படி?


மனிதன் பொருள்களை எப்படி அளந்து கணக்கிட்டான்? அதற்கு அவன் பயன்படுத்திய முறை என்ன? தன் உடலின் பாகங்களையே அளவு முறைகளாக முதன் முதலில் பயன் படுத்தினான். ஒரு க்யூபிட் (முழம்) என்பதை எப்படி அளந்தான்? முன் கையின் நீளமே ஒரு **க்யூபிட்**. இந்த அளவு பைபிளில் நிறைய வருகிறது. முழம் போடுதல் நம் பழங்காலக் கணக்கு.

டிஜிட்—கணக்கிலே அதிகமாக வருமே இவ்வார்த்தை. டிஜிட் என்பது ஒரு விரலின் அகலம். மேல் நாடுகளில் கையகலம் (ஹாண்டு) என்று ஓர் அளவு உண்டு. இங்கு கூடத்தான் இந்தச் சொல் வழக்கில் இருக்கிறதே. ஒரு **ஹாண்டு** என்பது நான்கு விரல்கிடை அகலத்தைக் குறிக்கும். நான்கு விரல்களின் அகலத்தையோ உள்ளங்கையின் அகலத்தையோ அளவாகக் கொண்டது — **ஹாண்டு**. இன்று இதை நான்கு அங்குலத்துக்குச் சமமாகக் கணக்கிடுகிறார்கள். குதிரைகளின் உயரத்தைக் கணக்கிட 'ஹாண்டு' பயன்படுகிறது.



ஒரு அடி (ஃபுட்) என்பது ஆதியில் ஒரு மனிதனின் கால் தடப்பாடியிலிருந்து உருவானது. இன்று 12 அங்குலங்கள் கொண்டது. **ஸ்பான்** என்றால் தெரியுமா? நாம் ஒரு சாண் என்கிறோமே அதுதான் ஒரு ஸ்பான். விரல்களை விரித்தால் கட்டை விரலுக்கும் சுண்டு விரலுக்கும் இடைப்பட்ட தூரம்தான் ஸ்பான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் ஹென்றி ஒரு **கெஜம்** என்பது எவ்வளவு என்பதை இப்படி முடிவு செய்தார். அவருடைய மூக்கு முனையிலிருந்து நீட்டிய கரத்தின் கட்டைவிரல் வரையிலுள்ள தூரம்தான் **யார்டு** (ஒரு கெஜமாகும்) என்றார்.



ஃபர்லாங் என்றால் தெரியுமா? ஃபர்ரோ லாங் என்பதின் சுருக்கமே ஃபர்லாங். ஒரு குடியானவன் தன் நிலத்தைத் தன் மாடுகளைக் கொஞ்சம் களைப்புத் தீர நிற்க வைக்கும் வரை உழக்கூடிய தூரமே ஒரு பர்லாங்காகும்.

அங்குலம் என்ற அளவு ஆதியில், கட்டை விரல்களின் அகலத்தைக் கொண்டே கணக்கிடப்பட்டது. 14ம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் இரண்டாம் எட்வர்டு மூன்று பார்லி தானியங்களை முனைக்கு முனை வைக்கும்போது ஏற்படும் நீளமே ஒரு அங்குலமாகும் என்று விதி செய்தார்.



ராட் — என்பதுமேல் நாடுகளில் ஓர் அளவு முறை. ஐந்தரை கெஜம் நீளமுடையது. இதை முதலில் எப்படித் தெரியுமா வகுத்தார்கள்? 16ம் நூற்றாண்டில் ஏற்பட்டது இது. சர்ச்சிலிருந்து திரும்பும் மனிதர்கள் பதினாறு பேர்கள் தங்கள் இடது காலை ஒன்றின் பின்னால் மற்றொன்றாக வைத்தார்கள். அது எவ்வளவு நீளமிருக்குமோ அதுதான் ஒரு ராட் என்று கணக்கிட்டு முடிவு கட்டினார்கள்.

மைல் - என்பது லத்தீன் மொழியில் மில்லி பாஸுவம் (Mille Passuvam) என்பதன் சுருக்கம்—அதாவது ஆயிரம் தடப்பாடிகளின் தூரமாகும்.

தப்படி - என்றால், ஒரு மனிதன் ஒரு காலை ஊன்றி மறு காலைப் பெயர்த்து வைக்கும்போது இரு கால்களுக்கிடைப்பட்ட தூரமே ஒரு தப்படியாகும்.

ஏக்கர் — நான்கு உழவு கால் (ஃபர்ரோஸ்) ஒரு பர்லாங் நீளம், ஒரு நாற்குச்சி இத்தனையும் கொண்டது ஒரு ஏக்கரின் பரப்பளவு.



யூகாலிப்ட்ஸ் என்றால் என்ன?

ஆஸ்திரேலியாக் கண்டத்துக்கே உரியதான ஒரு மரம்தான் யூகாலிப்ட்ஸ். ஆஸ்திரேலியா கண்டு பிடிப்பதற்கு முன் உலகில் யாருக்குமே இந்த மரத்தைப் பற்றித் தெரியாது. ஆனால் இன்றோ இது உலகின் பல்வேறு பகுதிகளிலும் பயிராக்கப்படும் பிரபலமான மரமாக விளங்குகிறது. இந்த மரத்தில் நூற்றுக் கணக்கான வகைகள் உண்டு. ஆஸ்திரேலியர்கள் இதை கம் ட்ரீ (கோந்து மரம்) என்று அழைக்கிறார்கள்.

சில யூகாலிப்ட்ஸ் மரங்கள் குட்டையாக அடர்ந்து தழைத்துப் படர்ந்துவிடும். வேறு சில மரங்கள் பெருங் காடுகளில் மிக மிக உயரமாக நெடிதுயர்ந்து வளரக் கூடியவை.

உலகிலேயே மிக உயரமான மரமாகக் கருதப்படுபவை கலிபோர்னியாவில் உள்ள ரெட்வுட் மரங்கள்தான். ஆனாலும் அதையும்விட உயரமாக வளரக் கூடியது யூகாலிப்ட்ஸ் மரங்கள் என்று வாதாடுவோரும் இருக்கிறார்கள்.

பார்வைக்கு மிக அழகாகத் தோற்றம் கொண்டது இம்மரம். இதன் இலைகளைத் தொட்டால் மிருதுவான தோலை ஸ்பரிசிப்பதுபோல் இருக்கும். இலையின் இரு பக்கங்களும் ஒரேமாதிரி இருக்கும். மற்ற தாவரங்களின் இலைகள் மல்லாந்தபடி இருப்பதால் சூரிய ஒளி படும் மேல் பக்கம் ஒரு மாதிரியாகவும் கீழ்பக்கம் ஒருமாதிரியாகவும் இருக்கும். இதன் நீண்ட இலைகள் கீழ் நோக்கித் தொங்கியபடி இருக்கின்றன. ஆகவே இதன் இலைகளில் இரு பக்கமும் சூரிய ஒளி சமமாகப் படுகிறது. நேராகவும், உயரமாகவும், அடிமரம் பருமனாகவும் வளரக் கூடியது இம்மரம். யூகாலிப்ட்ஸ் கன்றுகளை நட்டால் ஒரு வருஷத்தில் பதின்மூன்றடி உயரம் வளர்ந்துவிடும்.

யூகாலிப்ட்ஸ் மரம் மிகவும் பயனுள்ள மரங்களில் ஒன்று. இதற்கு ஏராளமான தண்ணீர் வேண்டும். ஆகவே சதுப்புப் பிரதேசங்களில் இதை அநேகமாகப் பயிராக்குவார்கள். கொசுக்கள் உற்பத்தியாகும் சதுப்பு நிலங்களிலிருந்து ஏராளமான தண்ணீரை இது எடுத்துக் கொண்டு விடுவதால் உலகில் சில பகுதிகளில் மலேரியாவை ஒழிப்பதற்கு இம்மரங்கள் பெருமளவுக்குப் பயன்படுகின்றன. இதன் இலைகளின் நுண்ணிய துவாரங்களில் இளம் மஞ்சளான ஒரு வகை எண்ணெய் இருக்கிறது. இதை வடித்தால் நெடியோடு கூடிய தைலம் கிடைக்கும். இதுவே நீலகிரித் தைலம் எனப்படும் தலைவலித் தைலமான யூகாலிப்ட்ஸ் தைலம். நம் நாட்டில் ஆங்கிலேயர் முதன் முதலில் நீலகிரி மலையில் இம்மரங்களை நட்டுப் பயிர் செய்து அதிலிருந்து எண்ணெய் தயாரித்ததினால் இதற்கு நீலகிரித் தைலம் என்றே பெயர் வந்து விட்டது. மூக்கடைப்பு, ஜலதோஷம், உடம்பு வலி, தசைப் பிடிப்பு ஆகிய பல நோய்களுக்கு இந்த எண்ணெய் ஆச்சரியப்படத் தக்க பலனைத் தரும் மருந்தாகப் பயன்படுகிறது. நரம்பு சம்பந்தமான நோய்களுக்கு இதை உள்ளுக்கும் கொடுக்கிறார்கள். கிருமி நாசினியாகவும் இது பயன்படுகிறது.

இதன் அடி மரம் ரொம்ப ரொம்பப் பயனுடையவை. முக்கியமாக 'ஜாரா', 'காரி' என்ற இரு வகை யூகாலிப்ட்ஸ் மரங்கள் மேற்கு ஆஸ்திரேலியாவில் வளருகின்றன. ரயில் தண்டவாளங்களிடையே 'ஸ்லீப்பர்'கள் போடுகிறார்களே அதற்கு உலகெங்கும் இம்மரங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். இரும்பைப் போல் உறுதி படைத்தவை. உப்பு நீர் இதை ஒன்றும் செய்யாது. ஆகவே, கடல் நீருக்குள் அமைக்கும் எல்லாவிதமான துறைமுகக் கட்டுமான வேலைகளுக்கு இம்மரங்கள் பெருமளவில் பயன்படுகின்றன. கண்கவர் மரச் சாமான்கள் செய்யவும் யூகாலிப்ட்ஸ் பயன்படுகிறது. பாலிஷ் போட்டால் இதன் இயற்கையான ஆழ்ந்த வண்ணங்கள் பளபளக்கும். உறுதியும் அழகும் இருந்தால் என்னதான் செய்யக் கூடாது?

யூகாலிப்ட்ஸ் ஓர் அற்புதமான மரம். உங்கள் வீட்டுக் கொல்லையிலேகூட இதைப் பயிரிடலாம்.



நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.
தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது— உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

அரைப்பங்கு
செலவில்
இருபங்கு
ஒளி!

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்


பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHILIPS

பாவேந்தரைப் போட்டுப் பாருங்கள்!


— தாணு



அடுத்த இதழில் யார்?

ஷீலாவைக் காணோம்

கதை: வாண்டு மாமா
சித்திரம்: ரமணி.




ஏஹோ! யாருமில்லையா? திருட்டுக் கழுதை. நாளெல்லாம் எங்கே போயிருந்தாய்? கடையைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று தெரியவில்லையா?
மங்கு அகப்பட்டுக் கொண்டதைக் கண்ட டைகர் வெளியே தப்பி ஓடி விடுகிறது.
இவனோட பொண்ணு எங்கே?
எனக்குத் தெரியாது.
பொய் சொல்லுகிறான். இவன் தான் மங்குவை அடித்து எங்கோ ஓட்டிப் போய் ஒளித்து வைத்திருக்கிறான். நாயை என் மீது ஏவி விட்டதும் உங்கள் மகன் தான்.
நீ உண்மையைச் சொல்லும் வரை இந்த அறைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியது தான். பிறத்தியாரோட விவகாரங்களிலே நாம் ஏன் தலையிட வேணும்? போதும் போதுமென்று இப்போ உன் பசிக்கு ஆகாரம் வருகிறது. நாளைக் காலையிலும் நீ உண்மையைச் சொல்லவில்லை, உனக்கு ஆகாரமே கிடையாது. பட்டினிதான் தெரிஞ்சுதா?
அங்கே அந்தப் பொண்ணு தனியா மரத்து மேலே பசியோட தவிச்சுக்கிட்டிருக்கும் பாவம். எப்படியாவது இந்த உணவை அவளுக்கு அனுப்பணும். நான் பசியை தாங்கிக்கிடுவேன்... ஓடியா! டைகரை கூட்டி அடிக்கு கூப்பிட்டுப் பார்க்கலாம்.
மங்குவின் முயற்சி பலித்தது. அவ் வீட்டின் அருகே தான் பதுங்கி இருந்தது அது. அவன் சீழ்க்கை ஒலி கேட்டு ஓடி வந்தது. ஆனால் இருள் படிந்த ஓர் மரத்தடியில் இரு ஜோடிக் கண்கள் தன்னையே கண்காணிப்பதைப் பாவம் டைகர் உணரவில்லை...
டைகர், இந்தா. இதைக் கொண்டு போய் 'ஷீலா'விடம் கொடு. நான் பிறகு வருகிறேன். சீக்கிரம் ஓடு.

இசைக் கலைஞனின் ஏமாற்றம்

கிரேக்க நாட்டின் பசும் புல் வெளியிலே ஒரு நாள் யூரிடிஸி என்ற பெண் உலாவிக் கொண்டிருந்தாள். அற்புதமான அழகுடையவள். ஆர்ஃபியஸ் என்ற பாடகனின் மனைவிதான் இந்த யூரிடிஸி. புல்வெளியிலே அவள் ஒரு பாம்பை மிதித்துவிட அது இவளைக் கடித்து விட்டது. விஷம் உடலில் பரவி யூரிடிஸி இறந்து போனாள்.

ஆர்ஃபியஸினால் இந்த இழப்பைத் தாங்க முடியவில்லை. இணையற்ற அழகியான மனைவியை இழந்த துக்கத்தை யாரால்தான் தாங்கிக் கொள்ள முடியும்? கடற்கரையிலேயே கண்ணீரும் கம்பலையுமாக உட்கார்ந்து கிடந்தான் ஆர்ஃபியஸ். அவன் கையிலிருந்த லயர் வாத்தியத்தில் தன் உள்ளத்தின் சோகத்தை யெல்லாம் கொட்டி அதை மீட்டினான். அந்தச் சோக இசையிலே உலகமே கண் கலங்கியது.

இப்படி இவன் சாப்பாடு தூக்கமின்றிச் சதா சங்கீதத்திலேயே புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்ட ஆர்ஃபியஸின் தாயார் ஒரு யோசனை கூறினாள்.

''உன் மனைவி யூரிடிஸி இல்லாமல் உன்னால் வாழ முடியாதென்றால் ஹெர்குலிஸைப் போல் இறந்தவர்கள் வாழும் உலகத்துக்குப் போய் உன் மனைவியைத் திரும்பப் பெற முயற்சி செய். அல்லது அம்முயற்சியில் நீயும் உயிரிழப்பாயானால் அவளோடு அங்கேயே தங்கி விடலாம்'' என்றாள்.

யாராலும் சாதிக்க முடியாத காரியம்தான் இது. ஆனால் ஆர்ஃபியஸ் பாதாள உலகத்துக்குப் போகும் ரகசிய வழியை அறிவான். இறந்தவர்கள் பாதாள உலகத்துக்குப் போவதாக கிரேக்கர்கள் நம்பினார்கள். டைக்ஸ் என்று ஒரு நதி. அதன் நீரெல்லாம் விஷம். அந்த நதியின் கரையிலே ஆர்னம் என்றொரு குகை உண்டு. அதன் வழியாகப் போனால் பல இன்னல்களைக் கடந்து பாதாள உலகத்துக்குப் போகலாம். இதை அறிவான் ஆர்ஃபியஸ்.

டைக்ஸ் நதி பூதங்களின் ராஜ்யமான டார்டாஸ் வழியாகப் போகிறது. அந்த ராஜ்யத்தின் எல்லையிலே ஸெர்பரஸ் என்ற மூன்று தலைகளை யுடைய நாய் காவல் காத்துக் கொண்டிருக்கும். நதியைக் கடக்க முயலும் எந்த மனிதனையும் அது உயிரோடு விடாது. தன் நினைவை விட்டு அகலாத மனைவியை மீட்பதற்காக ஆர்ஃபியஸ் இத்தகைய அபாயங்கள் நிறைந்த பயணத்தை மேற்கொள்ள முடிவு செய்தான்.

டைக்ஸ் நதிக் கரையிலே உள்ள படகோட்டியின் பெயர் சரான். மிகவும் மூர்க்க குணமுடையவன். இறந்தவர்களைத்தான் அவன் தன் படகில் ஏற்றிக் கொண்டு அக்கரைக்குப் போவான். அப்படிப்பட்ட சரானை, ஆர்ஃபியஸ் தன்னுடைய லயர் வாத்தியத்தை மீட்டி அதன் இனிய கானத்திலே சொக்க வைத்தான். படகோட்டியும் மனம் இளகித் தன் கசிந்த கண்களைத் துடைத்துக் கொண்டே ஆர்ஃபியஸைத் தன் படகில் ஏற்றி மறு கரைக்குக் கொண்டு போய் விட்டான். மூன்று தலைகளையுடைய ஸெர்பரஸ் நாய் ஆர்ஃபியஸின் அமுத கீதத்தைக் கேட்டுத் தன் வாலை ஆட்டிக்கொண்டு தனது மூன்று கொடிய தலைகளையும் அவன் முன் தொங்க விட்டபடியே சொரிந்து கொடுக்க நீட்டியது. இப்படித் தனது அற்புத இசையினால் அந்த ராட்சச நாயையும் வென்று முன்னேறினான் ஆர்ஃபியஸ். முடிவாக இறந்தவர்களின் இருப்பிடமான நரகத்துக்குள் நுழைந்து விட்டான். நரக ராஜ்யத்தின் மன்னனான மன்னர் புளுடோ தம் அரண்மனையில் மனைவி பெர்ஸி





ஃபோனுடன் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தார். அவர்கள் முன்னால் ஆர்ஃபியஸ் தன்னுடைய லயர் வாத்தியத்தை மீட்டியபடி முன் எப்போதும் பாடாத வகையில் அற்புதமாக இசைத்தான். அவன் இசையிலே பாதாள உலகம் பதுமையாக அசைவற்றுக் கிடந்தது. சூரியனால் ஆட்சி செய்யப்படும் பூலோகத்திலே (காதல்) அன்பு எப்படி மக்களை ஆட்சி செய்கிறது என்பதைத் தன் பாடலில் விவரித்தான் ஆர்ஃபியஸ். மன்னன் புளூடோவுக்குத் தன் மனைவியை அடைந்த அந்த நாள் நினைவு வந்தது. புளூடோவின் கண்களிலிருந்து நீர் திரண்டு கன்னத்தின் வழியே உருண்டு சிதறியது. பெர்ஸிஃபோன் சிஸிலி நாட்டின் பசும் புல் வெளிகளிலே உல்லாசமாகத் தான் ஓடியாடிய போது தன் கணவனைச் சந்தித்த அந்த நாட்களையும் நினைத்துக் கொண்டான். சூரியகிரணத்திலே மலர்ந்து சிரிக்கும் பூக்களை நினைத்துக் கொண்டாள் பெர்ஸிஃபோன். ''உன்னுடைய இசையும் காதலும் என்னை மிகவும் நெகிழ வைத்து விட்டன. உன் மனைவி யூரிடிஸியை உன்னுடன் பூலோகத்துக்கு அழைத்துப் போகலாம். ஆனால் ஒரு நிபந்தனை. உன் மனைவி இப்போது கோபங் கொண்ட ஆவிகளின் உடைமையாக இருக்கிறான். அந்த ஆவிகளை வென்றால்தான் நீ அவளை அடைய முடியும்? — காதல் தேவனின் ஆட்சிக்கு உட்பட்ட சூரிய வெளிச்சத்தை உடைய பூலோகத்துக்குப் போகும் வரையில் உன் மனைவியைத் திரும்பிப் பார்க்கவோ அவளுடன் பேசவோ கூடாது. தெரிந்ததா? திரும்பிப் பூலோகத்தை நோக்கி நட. நினைவிருக்

கட்டும். திரும்பிப் பார்க்காதே. உன் யூரிடிஸி உன்னைத் தொடர்ந்து வருவாள்'' என்றாள் பெர்ஸிஃபோன்.

மகிழ்ச்சியோடு ஆர்ஃபியஸ் திரும்பி நடக்கலானான். இதுவரையில் அவன் பாடிய இசையின் தரம் மாறியது. சோக கீதம் இசைத்தவனிடமிருந்து கிளம்பிய மகிழ்ச்சியான இசை பாதாள லோகத்தையும் பரவசத்தில் ஆழ்த்தியது. பூலோகத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தான் வெற்றியோடு.

நரகத்திலுள்ள கொடிய ஆவிகள் தங்கள் கரங்களை நீட்டி அவனைப் பிடிக்க முயன்றன; கூப்பிட்டன. ஆனால் ஆர்ஃபியஸ் அலட்சியமாகச் சிரித்தபடியே அவைகளை இலட்சியம் செய்யாமல் முன்னேறிக் கொண்டிருந்தான். ஏனென்றால் அவன் அழகு மனைவி அவனைத் தொடர்ந்து பின்னால் வந்து கொண்டிருக்கிறாள் என்ற நினைவினால். யூரிடிஸியைப் பார்க்க வேண்டும், அணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை இருந்தாலும் பாதாள உலக ராணி பெர்ஸிஃபோனின் எச்சரிக்கையை நினைத்து மௌனமாக முன்னேறிக் கொண்டிருந்தான் ஆர்ஃபியஸ்.

எலிஷியன் புல்வெளிகளைக் கடந்து சென்றபோது அவன் பின்னால் பூதங்கள் நர்த்தனமாடிக் கொண்டு வந்தன. ஸ்டைக்ஸ் நதியையும் பத்திரமாகக் கடந்து விட்டான். சூரிய ஒளி வீசும் பூலோகத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளை. பூத பைசாசங்கள் கோரமாகப் பற்களைக் காட்டிப் பயமுறுத்தின. ஆர்னம் குகையையும் மூடு பனியையும் கடந்து விட்டால் அபாயம் அகன்றுவிடும். இன்னும் கொஞ்ச நேரம்தான்.

ஆர்ஃபியஸின் நடையில் வேகம் கூடியது. அதே வேளையில் ஆவிகளின் சூழ்ச்சியும் தீவிரமாயின. ஆர்ஃபியஸ் தன் பின்னால் யூரிடிஸியின் பரிதாபமான குரலைக் கேட்டான். தன்னால் இனி நடக்க முடியாதென்றும், தான் மிகவும் களைத்துப் போயிருப்பதாகவும் அவள் தெம்பிழந்த குரலில் கெஞ்சினாள். ஆனாலும் ஆர்ஃபியஸ் திரும்பிப் பார்க்கவில்லை. அவள் கதறலுக்குப் பதில் சொல்லவில்லை. உற்சாக மூட்டும் உத்வேகமுள்ள இசையை எழுப்பியபடியே முன்னேறி நடந்து கொண்டிருந்தான். அவன் மனைவியின் குரலைப் போல் ஒரு கெட்ட ஆவிதான் அப்படிக் குரல் கொடுக்கிறது என்பதை அவன் அறியவில்லைதான்.

குகையின் வாய் தூரத்தில் தெரிந்தது. சூரிய வெளிச்சத்தின் இழை இலேசாகத் தோன்றியது. ஆர்ஃபியஸின் உடலிலே புதிய தெம்பு கூடியது. இன்னும் சில கணங்கள்தான். பூலோகத்தில் காலடி வைத்து விடலாம். அழகு மனைவியோடு, ஆனந்த வாழ்வு வாழலாம் என்ற மகிழ்ச்சியிலே தவிப்போடு தாவி நடை போடலானான். அப்போது பின்னாலிருந்து ஒரு தீனமான அலறல் கேட்டது. ''ஆர்ஃபியஸ்! ஐயோ, நான் கீழே விழுந்து கொண்டிருக்கிறேன். எனக்கு உதவ மாட்டாயா?''

அவனது அருமை மனைவியின் பரிதாபமான அந்தக் குரல் யூரிடிஸியினுடையதைப் போலவே அத்தனை தத்ரூபமாக இருக்கவே தவித்துப் போன ஆர்ஃபியஸ் பெர்ஸிஃபோனின் எச்சரிக்கையை மறந்து திரும்பிப் பார்த்தான். அவ்வளவுதான்.

தன் அழகு மனைவியின் சுந்தர வதனத்தை ஒரு விநாடிதான் கண்டான். அவன். கண்ணீர் வழிய அவள், ''சென்று வாருங்கள்'' என்று கையை அசைத்தாள். நரகத்தின் வாசல் அவன் முன்னால் படீரென்று சாத்தப்பட்டது. ஆர்ஃபியஸ் தன்னந் தனியனாக நின்றான்.

எத்தனை பாடு, எத்தனை துன்பம், எத்தனை தவிப்புக்கள்? அத்தனையும் பாழாகிப் போயிற்று. தாங்க முடியாத வேதனையோடு ஆர்ஃபியஸ் ஒரு நதிக் கரையில் அமர்ந்து தன் உள்ளத்து வேதனைகளையெல்லாம் ஒன்றாக்கித் தனது கடைசி இசையாகப் பாடிக் கொண்டிருந்தான். நதிக் கரைக்கு வந்த சில பெண்கள் தாங்கள் நடனமாடுவதற்காகப் பாடும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய வேண்டுகோளைக் கேட்கும் நிலையிலா அவன் இருந்தான்? அவன் நிலையை உணராத அப் பெண்கள் அவனைப் பைத்தியம் என்று கல்லால் அடித்தார்கள். தன் லயர் வாத்தியத்தோடு ஆர்ஃபியஸ் நதியில் மூழ்கினான். லயர் வாத்தியம் மூழ்கும்போது அதன் தந்திகள் ''யூரிடிஸி'' என்று ஒலி எழுப்பின.

மிகச் சிறந்த இசைக் கலைஞனின் இசைக் கருவி சேற்றில் புதைந்து கிடப்பதை விரும்பாத கடவுளர்கள் அவ்வாத்தியத்தைத் தங்கள் உலகத்துக்குக் கொண்டு போனார்கள். லைரா என்று பெயரிட்டு அதை அங்கு நிறுவினார்கள். ஆர்ஃபியஸின் உயிரற்ற உடலைச் சிலர் கரையேற்றிப் புதைத்தார்கள்.

அவனது ஆவி யூரிடிஸியுடன், பாதாள உலகில் கலந்தது. எலிஷியன் புல் வெளியில் இருவரும் இன்பமாக வாழலானார்கள்.

- விகேயெம்


சிரிக்கச் சிரிக்க..!
— சாமா
தம்பி தூரதேசம் சென்று பல ஆண்டுகள் கழித்துத் திரும்பி வந்ததும், தன் அண்ணன்.....
நீண்ட தாடியுடன் இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டு விசாரித்தான்.
அண்ணனது தாடிக்குக் காரணம், தம்பி மேல்நாடு போகும் போது அவன் ரேசரையும் கூடவே எடுத்துப்போய் விட்டானாம்!
"அந்த அமெரிக்கர் வாழைப்பழத்தை ஏன் அப்படிப் பார்க்கிறார்?"
"அதை உரிப்பதற்கு அதில் 'ஸிப்' எங்கிருக்கிறதென்று பார்க்கிறாரோ என்னவோ?"
கடன் கொடுக்கும் லைப்ரரி
"சார் ஒரு ரூபாய் கடன் கொடுப்பீர்களா? நானே திருப்பித் தருகிறேன்!"
"ஸ்டாம்புகளை நானேதான் ஒட்டிக் கொள்ள வேண்டுமா?"
"நீங்க ஏன் அனாவசியமா ஒட்டிக்கிறீங்க? உங்கள் பார்ஸல் மீதே ஒட்டுங்கள்."
போஸ்டாபீஸ்
டேய் ராமு! மழையா இருக்கு. அதனாலே இன்னிரவு இங்கேயே தூங்கிவிட்டு நாளைக் காலை வீட்டுக்குப் போகலாம்
சரி
அதுக்குள்ளே மழையிலே எங்கேடா போயிட்டு வந்தே?
வீட்டுக்குப் போய் இன்று இரவு படுக்க படுக்கை எடுத்து வந்தேன்



கிருமிகளோடு போராடியவர்

– கிருஷ்ணவேணி

''மிகவும் பயந்த சுபாவமுள்ள, நோஞ்சானான, புத்திசாலியு மில்லாத என் வகுப்பில் உள்ள ஒரு மாணவன்'' என்று ஆசிரியர் ஒரு பையனைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் அந்தப் பையனோ எந்த விஷயத்தைப் பற்றியும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அறிந்துகொள்வதில் ஆர்வம் உடையவனாக இருந்தான். இதனாலும் எரிச்சலடைந்த ஆசிரியர் ''மாணவர்களின் கடமை கேள்வி கேட்பதல்ல, கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வதுதான்'' என்றார்.

அந்த மாணவனிடம் இன்னுமோர் அபூர்வ குணமும் குடிகொண்டிருந்தது. அதுதான் செய்யும் காரியத்தில் நிதானம். பொறுமையோடு அதன் விளைவுகள் சரியாகும்வரை காத்திருப்பான். ''அகராதியில் உள்ள மூன்று முக்கியமான வார்த்தைகள்: (மனோதிடம் (will) வேலை (work) காத்திருத்தல் (wait). இம் மூன்று கற்களின் மீதுதான் என்னுடைய வெற்றிக் கோபுரத்தை நிறுவப் போகிறேன்'' என்று எழுதினான் அந்தப் பையன்.

தோல் பதனிடுபவரின் மகனாகப் பிறந்தவன் இவன். அந்தத் தோலின் மணம் அவன் ரத்தத்தில் கலந்திருந்தது. பாரிஸ் நகரத்தில் உள்ள பள்ளி ஒன்றில் படித்துக்கொண்டிருந்தபோது ஒரு தடவை நோய்வாய்ப்பட்டான். வீட்டு நினைவு வெகுவாகப் பாதிக்கத் தன் தகப்பனாருக்கு இப்படி எழுதினான். ''நீங்கள் தோல் பதனிடும் இடத்திற்கு வந்து அந்த மணத்தை ஒரு தடவை ஆழ்ந்து சுவாசித்தேனானால் நான் பூரண சுகம் பெற்று எழுந்து விடுவேன்.''

தோல் பதனிடும் தொழிலகத்தின் மணத்திலிருந்து விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடத்தின் நெடிக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டான் அந்த மாணவன். சிறு வயது முதலே தான் ஒரு ரஸாயன விஞ்ஞானியாக வேண்டுமென்று கனவு கண்டு வந்தவன் அந்தப் பையன். 'ஒன்றுக்கும் உதவாத இரசவாதியாகி வீணாகிறானே பையன்'' என்று கிராமத்தார் அவன் தகப்பனாரிடம் குறைகூறினார்கள். ஆனால் தகப்பனாருக்கோ தம் பையனிடம் அபார நம்பிக்கை. ''அவன் தவறான துறையைத் தேர்ந்தெடுக்க மாட்டான்'' என்று ஊரார் வாயை அடக்கி விட்டார்.

பையன் பி. எஸ்ஸி. டிகிரி வாங்கினான். ஆனால் அதில் உயர்ந்த தகுதிகளைப் பெறவில்லை. இதனால் பையனிடம் நம்பிக்கை இழந்த தந்தைக்கு ''பொறுமையாக இருங்கள். என்னிடம் நம்பிக்கை வையுங்கள். போகப் போக நான் எப்படி முன்னேறுகிறேன், பாருங்கள்'' என்று எழுதினான். இந்தத் தன்னம்பிக்கையும் பொறுமையும் யாருக்கு வரும்? அவனுக்குத்தான் அது கைவந்ததாக இருந்தது. அந்தப் பொறுமைதான் அவனை உலகின் மிகச் சிறந்த விஞ்ஞானியாக உயர்த்தியது. நோய்களை விரட்டியடித்து, மரணத்தை வென்று கொண்டு, மனித குலத்தை வாழ்விக்கச் செய்த அந்தப் பொறுமைசாலி யார் தெரியுமா?

லூயி பாஸ்சர் !

கிருமிகளின் விரோதியாக வந்தவர் பிரெஞ்சு விஞ்ஞானி லூயி பாஸ்சர்.




1822ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ந் தேதி பிறந்தவர் பாஸ்சர். பள்ளிக்கூடத்தில் புத்திசாலி என்று பெயரெடுக்காத லூயி, ரஸாயனத்தில் டாக்டர் பட்டம் பெறப் படித்துக் கொண்டிருந்தார். ஏழைக் குடும்பம். கல்லூரிப் படிப்புக்கான செலவுக்கு காலையில் ஐந்திலிருந்து ஏழுமணிவரை பல குழந்தைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்தார். சாப்பாட்டை ரேஷன் செய்து கொண்டார். அறையில் கணப்பு மிக மிகக் குறைந்த நேரத்துக்கே எரியும். பசியின் வேதனை அவரை அடிக்கடி வாட்டும். ''ஆனால் அதிர்ஷ்ட வசமாக எனக்கு அடிக்கடி தலைவலி வரும். பசியின் வலியை மறக்க இந்தத் தலைவலி உதவியாக இருந்தது'' என்று குறிப்பிடுகிறார் பாஸ்சர்.

வயிற்றுப் பசியைப் பற்றிக் கவலைப் படாதவருக்கு அறிவுப் பசிக்கு நல்ல விருந்து கிடைத்தது. ஜே. பி. டூமாஸ் என்ற மிகப் பிரபலமான விஞ்ஞானியின் சொற்பொழிவுகளைக் கேட்டதனால் பாஸ்சரின் விஞ்ஞான அறிவு வளர்ந்து டாக்டர் பட்டத்துக்கு ஓர் ஆராய்ச்சிக் கட்டுரைக்குப் பதில் இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிச் சமர்ப்பித்தார். டாக்டர் பட்டம் கிடைத்தது. பாஸ்சர் குடும்பமே மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது.

தான் படித்த பள்ளியிலேயே ஒரு பேராசிரியருக்கு உதவியாளராக வேலையில் அமர்ந்தார் பாஸ்சர். ஸ்படிகங்களைப்பற்றி ஆராயலானார். கிரிஸ்டலோ கிராஃபி என்பது அதன் பெயர். ரஸாயன மாற்றங்களால் ஏற்படும் பல்வேறு ஸ்படிகங்களுக்கு அவைகளின் குணம், அமைப்பு, செயல் திறன் பற்றி விரிவாக ஆராய்ந்து அனைவராலும் பாராட்டப்பெற்றார். இதன் பிறகு...

1849ல் ஸ்ட்ராஸ்பரோ நகரிலுள்ள பல்கலைக் கழகத்தில் ரஸாயனப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். இங்கு தான் அவருக்குத் திருமணத்தில் நாட்டம் விழுந்தது. அதிலும் பாஸ்சரின் பொறுமை பொலிவு பெற்றது. பல்கலைக் கழகத் தலைவரின் (ரெக்டர்) மகளை மனைவியாக்கிக் கொள்ள நினைத்தார். பெண்ணின் தகப்பனாருக்குத் தன் குடும்ப நிலையை விளக்கி உண்மையை ஒளிக்காமல் கூறி, ''என்னிடமிருப்பதெல்லாம் திடமான உடல், தன்னம்பிக்கை, சர்வ கலாசாலையில் என் பதவி. இவைகள்தான் எனக்கு உரிய சொத்துக்கள். ரஸாயன ஆராய்ச்சியில் என் வாழ்நாளை ஈடுபடுத்தி அதில் வெற்றி பெற வேண்டும் என்பது என் ஆவல். இந்தத் தகுதிகளை முன்வைத்து உங்கள் மகளை மணக்க விரும்புகிறேன்'' என்று எழுதினார்.





மணப் பெண்ணின் தந்தையான பல்கலைக் கழகத் தலைவர் பாஸ்சரின் கடிதத்தைத் தன் மகளிடமே கொடுத்தார். முடிவு பாஸ்சருக்குச் சாதகமாகவே இருந்தது. இவர் மணக்க விரும்பிய பெண் இவரை ஏற்க மறுத்தாள். இதனால் பாஸ்சர் மனம் தளர்ந்து விடவில்லை. பெண்ணின் தனக்குக் கடிதம் எழுதினார். மணக்க விரும்பும் பெண்ணுக்கே கடிதம் எழுதினார் உருக்கமாக. பொறுமை. பொறுமை. முடிவில் வெற்றி! பாஸ்சரை மணக்கச் சம்மதித்து விட்டாள் மணப் பெண்ணான மேரி லாரண்ட்!

திருமண நாள். மணப் பெண்ணும் அவர்கள் குடும்பத்தினரும் விருந்தினர்களும் சர்ச்சில் கூடியிருந்தார்கள். பாதிரியார் திருமணத்தை முடித்து வைக்கத் தயாராக இருந்தார். ஆனால் மணமகனைக் காணவில்லை.

"அந்த இளம் விஞ்ஞானி எங்கே?" பல குரல்கள் முணு முணுத்தன.

அந்த இளம் விஞ்ஞானியோ தமது ஆராய்ச்சிக் கூடத்தில் இருந்தார். பாஸ்சரின் உயிர்த் தோழன் ஒருவன் ஓடினான், ஆராய்ச்சிக் கூடத்துக்கு. சோதனைக் குழாய்களின் மீது குனிந்தபடி தன்னை மறந்திருந்த பாஸ்சரிடம் "இன்று உன் திருமணம் என்பதை மறந்துவிட்டாயா?" என்று கேட்டான்.

"மறக்கவில்லையே!"

"அப்படியானால் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"முட்டாளே! என் வேலையை முடித்துக் கொண்டிருக்கிறேன். ஓர் ஆராய்ச்சியின் நடுவில் அதை அரை குறையாக விட்டு விட்டு நான் வருவேன் என்று நீ எதிர்பார்க்கக் கூடாது" என்றார் பாஸ்சர். எடுத்த காரியத்தை முடிக்கும் வரை அதில் தளர்ச்சியோ அலட்சியமோ காட்டாதவர் அந்த மேதை.

வாழ்க்கைப் போராட்டத்துக்குத் தயாரானார் பாஸ்சர். அவர் தம் தொழிலைத் தொடங்கும்போதே வெறுப்பும் பொறாமையும் அவரைச் சூழ்ந்து கொண்டன. ஆனால் எதையும் பொறுமையோடு தாங்கும் சக்தி படைத்த பாஸ்சர் முடிவில் எல்லா வித எதிர்ப்பையும் வென்று கொண்டார். ரசாயனத்திலிருந்து அவரது கவனம் உயிரியலில் திரும்பியது. பெரும் பெரும் அறிவாளிகளும் ஆராய்ச்சியாளரும் கூட இறந்த உடலிலிருந்துதான் புதிய உயிர் பிறப்பதாக நம்பினார்கள். இறந்த எருதின் உடலிலிருந்து தேனீக்கள் உயிர் பெற்று வரும் என்றார்கள். 'ஒரு பாத்திரத்தினுள் கொஞ்சம் வினைக் கந்தையையும் கொஞ்சம் தானியங்களையோ அல்லது பாலேட்டையோ வைத்து அழுகி மூடி மூன்று வாரங்கள் வைத்திருந்தால் அதனுள்ளிருந்து ஆணும் பெண்ணுமாக நன்கு வளர்ந்த எலிகள் உருவாகிக் குதித்து வெளியே ஓடும்' என்றெல்லாம் கூறி வந்தார்கள். இந்த மூட நம்பிக்கைகளை முறியடிக்க முற்பட்டார் பாஸ்சர். பழமையில் ஊறிய மூத்த அறிவாளிகளும் ஆராய்ச்சியாளரும் பாஸ்சரை எதிர்த்தார்கள். "சர்க்கஸ் வித்தைக்காரன்", "கோமாளி" என்றெல்லாம் பரிகசித்தார்கள். ஆனால் பாஸ்சரோ அத்தனை எதிர்ப்புக்களையும் புன்முறுவலோடு தாங்கிக் கொண்டார். பொறுமையாகத் தன் ஆராய்ச்சி முடிவுகளை விளக்கினார். "ஒரு விஞ்ஞானி தன்னைப் பற்றி வருங்காலம் என்ன சொல்லப் போகிறது என்பதைத்தான் நினைத்துச் செயல்பட வேண்டுமே தவிர இன்று வாழுவோரின் புகழுரைகளையோ, அவமதிப்புக்களையோ அல்ல" என்றார் பாஸ்சர் தம் மனைவியிடம்.

உயிரின் தோற்றம் பற்றிய சர்ச்சைக்கிடமான விஷயத்தைப் பற்றி புகழ் பெற்ற விஞ்ஞானிகள் கூடி முடிவெடுப்பது என்று ஏற்பாடாயிற்று. இரு தரப்பினரும் தங்கள் தங்கள் முடிவுகளை விளக்கும் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார்கள். விளக்கமும் அளித்தார்கள். முடிவு பாஸ்சருக்குச் சாதகமாகவே இருந்தது. "ஒரு உயிரினால்தான் மற்றொரு உயிரை உண்டாக்க முடியும்" என்ற தத்துவம் நிரூபிக்கப்பட்டது.

உயிர்த் தோற்றத்தை உறுதிப்படுத்திய பாஸ்சர் உயிர்களைப் பாதுகாப்பதில் தன் ஆராய்ச்சிகளைத் திருப்பினார். பட்டுத் தொழிலைப் பாதிக்கும் மர்மமான நோய் ஒன்று பட்டுப் புழுக்களையெல்லாம் நாசமாக்கி வந்தது. பிரான்ஸின் பட்டுத் தொழிலே நசித்து விடுமோ என்ற பீதி பரவியது. அலேஸ் மாகாணத்தில் உள்ள விஞ்ஞான அகாதமியில் தன் உழைப்பால் ஒரு நல்ல பதவியிலிருந்தார் பாஸ்சர். பட்டுப் புழுக்களுக்கு வரும் நோயை ஆராய்ந்து முடியுமானால் அந்நோய்க்கு நிவாரணம் காணவும் பாஸ்சரைக் கேட்டுக்கொண்டார்கள். எதிர்ப்புக்களும் ஏசல்களும் மறுபடி புயலாக வந்து மோதின பாஸ்சரின் மீது. "ரசவாதிக்கு நோயைக் குணமாக்கும் மார்க்கம் எங்கே தெரியும்?" என்றார்கள் பட்டுப் புழுக்களின் உணவான 'மல்பரி' செடிகளை உற்பத்தி செய்வோர். ஒவ்வொரு நாளும் பல்



லாயிரக் கணக்கில் பட்டுப் புழுக்கள் இறந்து கொண்டிருந்த அந்த வேளையிலும் எதற்கும் கூச்சலிடும் பொது மக்களோ பாஸ்சரை இன்னும் மோசமாக ஏசினார்கள். இத்தனை எதிர்ப்புக்களுக்கும் கூச்சல் பேச்சுக்களுக்கும் பாஸ்சர் கூறிய ஒரே பதில், அதுவும் ஒரே வார்த்தையில்: ''பொறுமை பொறுமை!''

ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் உழைத்தார். காலையில் ஐந்து மணியிலிருந்து இரவு பதினொரு மணி வரையில். இந்த நிலையில் பட்சவாத நோயினால் பாதிக்கப்பட்டார், பாஸ்சர். வைத்தியர்கள் பாஸ்சரின் உயிருக்கு அபாயம் ஏற்படுமோ என்றுகூடப் பயந்தார்கள். பாஸ்சரின் உடல் இயங்க முடியாமல் படுக்கையில் கிடந்தாலும் மனம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. தன்னுடைய ஏராளமான பலத்தையும் உழைப்பையும் செலவிட்டபோதுகூட அறிய முடியாத வழியை; உடலால் செயல்பட முடியாத நிலையில் அமைதியாகப் படுத்திருக்கும் போதுதான்—பட்டுப் புழுக்களைப் பாதிக்கும் நோயை ஒழிக்க மார்க்கம் - கண்டார் பாஸ்சர்.

''நோய்வாய்ப்பட்ட முட்டைகளிலிருந்து புழுக்கள் வெளி வருவதால் ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கும் அந் நோய் பரவுகிறது. ஆகவே நோயால் பாதிக்கப்பட்ட முட்டைகளை அழித்து விட்டால் ஆரோக்கியமான புதிய தலைமுறைப் புழுக்களை உற்பத்தி செய்ய முடியும்'' என்ற முடிவுக்கு வந்தார் பாஸ்சர். இத்தனை எளிய வழியை இத்தனை கஷ்டங்களுக்கும் உழைப்புக்கும் பிறகே உணர முடிந்தது. இந்த நிலையிலும் பாஸ்சருக்கு ஏச்சுக்கள் குறையவில்லை. மல்பரிச்செடி விதைகளை விநியோகிக்கும் வியாபாரிகள் ஆத்திரமடைந்தார்கள். காரணம் அவர்கள் விநியோகிக்கும் மல்பரிச்செடி விதைகள் நோய்வாய்ப்பட்டவை. அதைத் தின்று அதிலிருந்து உற்பத்தியாகும் புழுக்களும் நோயுடையவையாகத்தானே இருக்கும் ? மோசமான விதைகளை நல்ல லாபத்துக்கு விற்கும் வியாபாரிகள் பாஸ்சரைப் பற்றி மட்டமான வதந்திகளை மக்களிடையே பரப்பினார்கள். 'பட்டுப் புழுக்களின் நோயை ஒழிக்க முடியவில்லை பாஸ்சரினால். ஆகவே, அவரை மக்கள் கற்களால் அடித்து அலேயஸ் மாகாணத்தை விட்டே விரட்டப் போகிறார்கள்' என்று கதை கட்டி விடலானார்கள்.

இந்த வதந்தி பாஸ்சரின் காதுக்கும் எட்டியது. அப்போது அவர் தன் பட்சவாத நோயின் கொடுமையிலிருந்து விடுபட்டு எழுந்திருந்தார். செய்தியைக் கேட்டவர் தோள்களைக் குலுக்கியபடி புன்முறுவலுடன் ''பொறுமையைக் கடைப் பிடியுங்கள்'' என்றார் நண்பர்களிடம். பாஸ்சரின் பொறுமை பலன் தரத்தான் செய்தது. அவர் கூறியபடி சில பட்டுப் புழு உற்பத்தியாளர் தங்கள் பண்ணைகளில் உள்ள நோய்வாய்ப்பட்ட செடி, புழுக்களையெல்லாம் அழித்துவிட்டுப் பாஸ்சர் சொன்னபடி ஆரோக்கியமான விதைகளிலிருந்து ஆரோக்கியமான மல்பரிச் செடிகளைப் பயிரிட்டார்கள். ஒவ்வொரு தடவையும், ஆரோக்கியமான செடிகளும் புழுக்களும் உற்பத்தியாயின. பண்ணையாளரின் முகத்தில் கவலை மறைந்தது; மகிழ்ச்சி மலர்ந்தது. தங்களுக்கு வாழ்வளித்த பஸ்சருக்குச் சிலையே எழுப்பினார்கள் அலேயிஸ் மாகாணத்தார்.

கவலை கனிந்த, உறுதியான, வெளுத்துச் சுருக்கங்கள் விழுந்த பாஸ்சரின் முகத்திலே தியாகத் தழும்புகள் தங்கள் முத்திரையையும் பதித்தன. உழைப்புக்கேற்ற ஊதியமில்லை. தேவைக்கதிகமாக அவர் எதையுமே எதிர்பார்ப்பதும் இல்லை. ''பிரான்சு தேசத்தில் தன்

னுடைய சுயநலத்துக்காக ஒரு விஞ்ஞானி உழைப்பானானால் அவன் தன்னைத் தாழ்த்திக் கொண்டவனாவான்'' என்பார் பாஸ்சர். சொந்த நலம் கருதி அவர் எப்போதுமே உழைத்ததில்லை. பட்டுப் புழுக்களுக்கு வாழ்வளித்த பாஸ்சர் ஒயின் என்ற மது தயாரிப்போரின் கஷ்டங்களைப் போக்க முன்வந்தார். ஒரே வருஷத்தில் பிரான்சின் ஒயின் தயாரிக்கும் தொழிலில் பல லட்சம் டாலர்கள் நஷ்டம் ஏற்பட்டது. எப்படி? தயாரித்த ஒயின் அத்தனையும் குடிக்க முடியாதபடி புளித்துக் கெட்டுப் போயிற்று. காரணம் புரியவில்லை.

பாஸ்சரின் உதவியை நாடினார்கள். சூட்சும தரிசினியைப் (மைக்ராஸ்கோப்) பூரணமாகப் பயன்படுத்திய விஞ்ஞானி பாஸ்சர்தான். நல்ல ஒயினையும் கெட்டுப் போன ஒயினையும் சூட்சும தரிசினி மூலம் ஆராய்ந்தார் பாஸ்சர். இரண்டிலும் ஈஸ்ட் அணுக்கள் (பாக்டீரியா) இருந்தன. ஆனால் அவைகளின் அமைப்பு மாறுபட்டிருந்தது. புளித்துக் கெட்டுப் போன ஒயினில் உள்ள ஈஸ்ட்டுகள் புது மாதிரியாக இருந்தன. இந்தப் புது மாதிரியான ஈஸ்ட் அணுக்களை ஒழிக்க வேண்டும். எப்படி? ஒயினோ பீரோ தயாரிக்கப்பட்டதும் அதை ஓரளவுக்கு (120 டிகிரி பாரன்ஹீட்டுக்கு) காய்ச்ச வேண்டும். இப்படிக் காய்ச்சுவது ஈஸ்ட் அணுக்களைக் கொன்றுவிடும். இதன் பிறகு இதைக் காற்றுப் புகாதபடி மூடி வைத்து விட்டால் ஒயின் புளித்துக் கெட்டுப் போகாது. பாஸ்சர் கண்ட முடிவு இதுதான். ஆனால் ஒயின் தயாரிப்பவர்கள் ஒயினைக் காய்ச்ச வேண்டும் என்பதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார்கள். அவர்களைத் திருப்திப்படுத்த சில ஒயின் புட்டிகளை சூடாக்கி மூடினார். மற்றவைகளைப் பழைய முறைப்படி அப்படியே வைத்தார். சில மாதங்கள் கழித்து இரண்டையும் திறந்து பார்க்கும்படி சொன்னார் தயாரிப்பாளர்களிடம். அதன்படியே செய்தபோது காய்ச்சிய ஒயின் புட்டிகள் கெடாமல் அன்று தயாரித்தது போலிருந்தன. காய்ச்சாதவையோ புளித்துப் பொங்கிக் கெட்டுப் போயிருந்தன. மகிழ்ச்சியடைந்த ஒயின் தயாரிப்பாளர்கள் மதுவைக் காய்ச்சுவதற்கு மறுப்புத் தெரிவிப்பதைக் கைவிட்டார்கள்.

பாஸ்சரின் வாழ்க்கை முழுதுமே போராட்டம் நிறைந்ததுதான். மனித குலத்துக்கு நன்மை செய்வதற்காக அறியாமையோடு போராடியவர் பாஸ்சர்.

(அடுத்த இதழில் முடியும்)

கிழமையைக் கண்டுபிடிக்க உதவும் நிரந்தர நாட்காட்டி

அட்டவணை 'A' (ஆண்டுகள்) 1801–1900	அட்டவணை 'A' (ஆண்டுகள்) 1901–1980	அட்டவணை 'B' (மாதங்கள்) ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்ட்	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிஸம்பர்
01 29 57 85	25 53	4	0	0	3	5	1	3	6	2	4	0	2
02 30 58 86	26 54	5	1	1	4	6	2	4	0	3	5	1	3
03 31 59 87	27 55	6	2	2	5	0	3	5	1	4	6	2	4
04 32 60 88	28 56	0	3	4	0	2	5	0	3	6	1	4	6
05 33 61 89	01 29 57	2	5	5	1	3	6	1	4	0	2	5	0
06 34 62 90	02 30 58	3	6	6	2	4	0	2	5	1	3	6	1
07 35 63 91	03 31 59	4	0	0	3	5	1	3	6	2	4	0	2
08 36 64 92	04 32 60	5	1	2	5	0	3	5	1	4	6	2	4
09 37 65 93	05 33 61	0	3	3	6	1	4	6	2	5	0	3	5
10 38 66 94	06 34 62	1	4	4	0	2	5	0	3	6	1	4	6
11 39 67 95	07 35 63	2	5	5	1	3	6	1	4	0	2	5	0
12 40 68 96	08 36 64	3	6	0	3	5	1	3	6	2	4	0	2
13 41 69 97	09 37 65	5	1	1	4	6	2	4	0	3	5	1	3
14 42 70 98	10 38 66	6	2	2	5	0	3	5	1	4	6	2	4
15 43 71 99	11 39 67	0	3	3	6	1	4	6	2	5	0	3	5
16 44 72	12 40 68	1	4	5	2	3	6	1	4	0	2	5	0
17 45 73	13 41 69	3	6	6	2	4	0	2	5	1	3	6	—
18 46 74	14 42 70	4	0	0	3	5	1	3	6	2	4	0	2
19 47 75	15 43 71	5	1	1	4	6	2	4	0	3	5	1	3
20 48 76	16 44 72	6	2	3	6	1	4	6	2	5	0	3	5
21 49 77	17 45 73	1	4	4	0	2	5	0	3	6	1	4	6
22 50 78	18 46 74	2	5	5	1	3	6	1	4	0	2	5	0
23 51 79	19 47 75	3	6	6	2	4	0	2	5	1	3	6	1
24 52 80	20 48 76	4	0	1	4	6	2	4	0	3	5	1	3
25 53 81	21 49 77	6	2	2	5	0	3	5	1	4	6	2	4
26 54 82	22 50 78	0	3	3	6	1	4	6	2	5	0	3	5
27 55 83	23 51 79	1	4	4	0	2	5	0	3	6	1	4	6
28 56 84	24 52 80	2	5	6	2	4	0	2	5	1	3	6	—

அட்டவணை 'C' (வார நாட்கள்)

ஞாயிறு	1	8	15	22	29	36	வியாழன்	5	12	19	26	33	—
திங்கள்	2	9	16	23	30	37							
செவ்வாய்	3	10	17	24	31	—	வெள்ளி	6	13	20	27	34	—
புதன்	4	11	18	25	32	—	சனி	7	14	21	28	35	—

1839ம் ஆண்டு ஜூலை மாதம் 25ந் தேதி என்ன கிழமை என்று கேட்டால் உங்களால் சொல்ல முடியாதல்லவா? ஆனால் இனிமேல் உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். இதன் உதவியினால் 1801-ம் வருடத்திலிருந்து 1980ம் வருடம் முடிய உள்ள தேதிகளின் கிழமையைச் சுலபமாக அறிந்து கொள்ள முடியும்.

1839ம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் நாள் என்ன கிழமை என்று கண்டு பிடிக்க: முதலில் அட்டவணை Aயிலிருந்து 1839ம் ஆண்டினைக் கண்டு பிடிக்கவும். பிறகு அதே வரிசையில் அட்டவணை Bயில் ஜூலை மாதத்தில் என்ன எண் இருக்கிறது என்று பார்க்கவும். அதனுடன் கிழமை கண்டுபிடிக்க வேண்டிய தேதியான 25ஐக் கூட்டவும். 25 + 1ம் சேர்ந்த கூட்டுத் தொகையான 26 என்ற எண்ணுக்கு அட்டவணை Cயில் என்ன கிழமை இருக்கிறது என்று பார்க்கவும். அதுவே 25–7–1839 தேதியின் கிழமையாகும். அதாவது அன்றைய தினம் வியாழக் கிழமை என்பது தெரிய வரும்.

— பி. ஆர். எஸ்.

கழுதை கேட்ட வரம்

பொன்மலை பரிமளம்

பல வருடங்களுக்கு முன் பணக்காரர் ஒருவர் ஒரு குதிரையையும் கழுதையையும் வளர்த்து வந்தார். அவரது மகன் காலையிலும் மாலையிலும் குதிரையில் ஏறிச் சவாரி செய்வான். குதிரையை அன்போடு அவன் தடவித் தட்டியும் கொடுப்பான். கழுதையின் பக்கம் செல்லவே மாட்டான். காரணம்: அந்தக் காலத்தில் இப்பொழுது காட்சி தருவது போல் கழுதையின் உருவம் கிடையாது: குட்டையான காதுகளும், கறுத்த முகமும் கொண்டு சற்று அருவருப்பாக இருக்கும்.

அந்த வீட்டு வேலைக்காரன் தினமும் கழுதையின் மேல் ஏறிக்கொண்டு கடைக்குப் போய் வீட்டுக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் வாங்கி மூட்டையாகக் கட்டி அதன் மேல் வைத்துக் கொண்டு வருவான். இன்னொரு வேலைக்காரன் பக்கத்திலுள்ள காட்டுக்குச் சென்று மரத்தை வெட்டி விறகுக் கட்டைகளையெல்லாம் கழுதை மேல் ஏற்றிக் கொண்டு வருவான். கழுதை கஷ்டப்பட்டு உழைத்தாலும், அதை 'மாலிஷ்' செய்யாமல் குதிரைக்குத்தான் அந்த வீட்டு வேலைக்காரர்கள் குதிரையின் உடலைப் பிடித்து மாலிஷ் செய்வார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் கழுதைக்கு மிகவும் துன்பமாகஇருக்கும். சில சமயத்தில் அதற்கு அழுகை கூட வரும்.

'கஷ்டப்பட்டு வேலை செய்யும் நம்மை யாரும் கவனிக்காமல் இந்தக் குதிரையைக் கவனிக்கிறார்களே. நிறை கர்ப்பமாக இருக்கும் என்னை இப்படி வாட்டி வதைக்கிறார்களே' என்று எண்ணிய கழுதை கட்டியிருந்த கயிற்றை அறுத்துக்கொண்டு அந்த வீட்டை விட்டு வெகுதூரம் ஓடியது. ஓடி ஓடிக் களைத்துப்போன கழுதை ஒரு மரத்தடியில் படுத்துக் கொண்டு தன் நிலைமையை நினைத்து அழுது கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு வன தேவதை அதன் முன் தோன்றி, ''என் அன்புள்ள கழுதையே! நீ ஏன் இப்படி அழுகிறாய்? உன் குறை என்ன?'' என்று கேட்டது.


தன் எதிரே இறக்கையுடன் கூடிய வன தேவதையைக் கண்டதும் அது மிகவும் பயந்தது.

''பயப்படாதே. நான் உனக்கு நன்மை செய்ய வந்திருக்கிறேன். உன் குறையைச் சொல். உன் குறையைப் போக்குகிறேன். நீ கேட்ட வரத்தைத் தருகிறேன்'' என்றது வன தேவதை.

''தேவதையே! நான் ஒரு பணக்காரன் வீட்டிலிருந்து ஓடி வந்துவிட்டேன். அந்த வீட்டில் ஒரு குதிரை இருக்கிறது. அதைத்தான் தினமும் கவனிக்கிறார்கள். என்னிடம் நன்றாக வேலை வாங்கிவிட்டு என்னை யாரும் கவனிப்பது கிடையாது. நான் அழகாக இல்லையாம். என் காதுகள் குட்டையாக இருக்கின்றனவாம். என் காதுகள் குட்டையாக இருப்பதால் மற்றவர்கள் பேசுவது எனக்குக் கேட்கவே மாட்டேன் என்கிறது. தவிர, என் மூக்கு கறுப்பாக அசிங்கமாக இருக்கிறதாம். பலமாகக் கத்துவதற்குச் சக்தியற்ற நான் மெதுவாகக் கனைத்தால்கூட அபசகுனம் என்கிறார்கள். என்னை யாருமே பாராட்ட மாட்டேன் என்கிறார்கள். என்னை எல்லோரும் பாராட்டினால்தான் எனக்கு நிம்மதியாக இருக்கும்'' என்று தன் குறையைக் கூறியது கழுதை.

''இவ்வளவுதானே? உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்'' என்றது வன தேவதை.

''குதிரையைவிட நான் எட்டுமடங்கு அழகாக இருப்பதாகக் கூற வேண்டும். என்னை எப்படியாவது ஒரு தடவையாவது குதிரை என்று கூப்பிட வேண்டும். யார் என்ன பேசினாலும் அந்த விஷயம் என் காதுகளில் படும்படி என் காதுகள் மிகவும் நீளமாக இருக்க



வேண்டும். வாசனை தெரியா விட்டாலும் பரவாயில்லை. கறுப்பாக இருக்கும் என் மூக்கு வெள்ளிபோல் பிரகாசமாக வெள்ளையாக இருக்க வேண்டும். எனக்குத் தொந்தரவு தருபவர்களை என் இரண்டு கால்களால் உதைக்கும் ஆற்றல் வேண்டும். நான் கத்துவது பலமாகவும் புதுமையாகவும் இருப்பதுடன் என் குரலைக் கேட்டு நான்தான் கத்துகிறேன் என்று எல்லோரும் தெரிந்து கொள்வதுடன் என் குரல் ஒலி கேட்டால் நல்ல சகுனம் என்று எல்லோரும் சொல்ல வேண்டும்'' என்று வன தேவதையிடம் வரம் கேட்டது கழுதை.

''இவ்வளவுதானே! நீ கேட்ட வரங்களைக் கொடுத்தேன். இனி மகிழ்வாக இரு'' என்று கூறிவிட்டு மறைந்தது தேவதை.


அந்தக் கழுதை கர்ப்பமாக இருந்ததால் அன்றிரவு அந்த இடத்திலேயே குட்டி ஒன்று போட்டது.

மறு நாள் காலை கழுதையைக் காணாததால் அந்த வீட்டு வேலைக்காரர்கள் இருவருமே கழுதையைத் தேடிக் கொண்டு காட்டுப் பக்கமாக வந்து சேர்ந்தார்கள்.

குட்டி போட்ட கழுதை, 'நேற்றிரவு தேவதை சொன்னது நிஜமாக இருக்குமா?' என்று நினைத்துக்கொண்டு காலை வெளிச்சத்தில் தன் குட்டியைப் பார்த்தது.

அழகான தன் குட்டியைப் பார்த்த கழுதை மிகவும் மகிழ்ந்தது. தேவதை சொன்னது பலித்து விட்டது என்று அது மகிழ்ந்தாலும், 'மனிதர்கள் தன்னைப் பெருமையாக நினைக்கவேண்டுமே?' என்று கவலைப்பட்டது. அப்பொழுது கழுதையைத் தேடிக் கொண்டு வந்த அந்த இரு வேலைக்காரர்களில் ஒருவன் ''அண்ணே! அதோ பார்த்தாயா ஓர் அழகான குதிரைக் குட்டி!'' என்றான்.

''பார்ப்பதற்குக் குதிரைக் குட்டி மாதிரிதான் இருக்கிறது. ஆனால் இது கழுதைக் குட்டி. குதிரையைக் காட்டிலும் எட்டு மடங்கு அழ





நண்டம்மா!

வரப்பில் எங்கும் வளையைத் தோண்டி
வாழுகின்ற நண்டம்மா!
மறைப்பும் முன்னல் ஏதும் அதிலே
வைக்க வில்லையே! ஏனம்மா?
வெள்ளம் வந்தால் என்ன செய்வாய்?
வெகுளிப் பெண்ணே, நண்டம்மா!
பள்ளம் முழுதும் நிரம்பி விட்டால்
பதுங்குவ தெங்கே சொல்லம்மா!
ஆளைக் கண்டால் ஓடி உள்ளே
அடங்கு கின்ற நண்டம்மா!
வேலை எனக்கும் நிறைய இருக்கு;
விடையைச் சொல்லிச் செல்லம்மா!

— அர். இல. தமிழடியான்

காக இருக்கிறதே கழுதைக் குட்டி'' என்று வியந்தான்.

அவர்கள் பேசிக் கொள்வதை மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த கழுதை, 'ஆகா! அவர்கள் பேசிக் கொள்வது நன்றாகக் கேட்கிறதே! குதிரையைக் காட்டிலும் என் குட்டி எட்டு மடங்கு அழகு என்கிறார்களே' என்ற மகிழ்ச்சியில் மெதுதாகக் கனைக்கும் இயல்புடைய அது 'காள்...காள்...' என்று கத்தியது. அதன் சத்தம் அதற்கே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

இதுவரையில் இதுபோன்ற சத்தத்தை கேட்டறியாத வேலைக்காரர்களில் ஒருவன், ''அண்ணே! ஏதோ கத்துது. நல்ல சகுனமாக இருக்குமா? நம் கழுதை கிடைக்குமா?'' என்றான்.

''ஆகா! நாம் கத்தியது நல்ல சகுனமாக இருக்குமா என்கிறானே'' என்ற மகிழ்ச்சியில் மறைந்திருந்த கழுதை அவர்கள் இன்னும் என்ன பேசுகிறார்கள் என்று கேட்க அந்த இடத்தை விட்டுச் சற்று நகர்ந்தது. கழுதையைப் பார்த்த வேலைக்காரன், ''நல்ல சகுனம்தான். அதோ நம் கழுதை!'' என்றான்.

அப்பொழுது துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த கழுதைக் குட்டி தன் தாயிடம் ஓடி வந்தது. குட்டியையும் கழுதையையும் பார்த்த அவன், ''ஆகா! மூக்கு அழகாக இருக்கிறதே! வெள்ளி மூக்குக் குதிரை... வெள்ளி மூக்குக் குதிரை'' என்று மகிழ்வுடன் கூறியவன் கழுதைக் குட்டியைப் பிடிக்கப் பின் பக்கமாகச் சென்றான். உடனே கழுதை குட்டி தன் பின்னங்கால்கள் இரண்டையும் தூக்கி அவனை எட்டி உதைத்துத் தள்ளி விட்டது.

இதை யெல்லாம் பார்த்த அந்தக் கழுதைக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. வனதேவதையிடம் கேட்ட வரம் பலித்து விட்டது என்று ஆச்சரியத்-துடன் நின்று கொண்டிருக்கையில் வேலைக்காரர்களில் ஒருவன் கழுதைக்யைப் பிடித்துக் கயிற்றால் கட்டிப் பிடித்துக் கொண்டான். வேறு வழியின்றித் துள்ளிக் குதித்த கழுதைக் குட்டியும் தன் தாயிடம் வந்தது.

தெரியுமா?

803. மனித உடலிலே ஆட்ரியம்ஸ் (Atriums) வெண்ட்ரிகிள்ஸ் (Ventricles) என்ற உறுப்புக்கள் எங்கு இருக்கின்றன?

804. பென்காஸி என்ற ஊரை எங்கு தேட வேண்டும்?

805. பதின்மூன்றும் நூற்றாண்டில் சீனாவுக்குக் கால் நடையாகச் சென்ற ஐரோப்பியர் யார்?

806. பைசா நகரின் சாய்ந்த கோபுரம் செங்குத்தான நிலையிலிருந்து எத்தனை அடிகள் சாய்ந்துள்ளது தெரியுமா?

807. க்ளைகோஜன் என்றால் என்ன?

808. பெண்ட்ஸ் (Bends) என்பது எவரெஸ்ட் மலையில் உள்ள பனிப் படலத்தில் ஏற்படும் பாதாளப் பிளவுக்குப் பெயர் — இது சரியா தவறா? தவறானால் அதற்குப் பொருள் என்ன?

809. பிளாங்க்டன் (Plankton) என்பது பிராணியா, தாவரமா அல்லது இரண்டுமா?

810. சிரிக்கும் கழுதை (Laughing Jackass) என்பது ஒரு பறவையின் குணத்துக்காக ஏற்பட்ட பெயர். அதன் உண்மைப் பெயர் என்ன?

811. பான்கிரியாஸ் (Pancreas) சுரப்பிகள் உற்பத்தி செய்வது என்ன பொருளை?

812. இமய மலையில் வாழ்வதாகக் கருதப்படும் பனி மனிதனுக்கு ஒரு பெயர் உண்டு. அது என்ன?

813. கிரேக்க தத்துவ ஞானியான பிளேட்டோ இன்னொரு தத்துவ ஞானியான அரிஸ்டாடலின் சீடர். இது சரியா?

814. தென் அமெரிக்காவின் ஒரு பகுதி இன்னமும் முழுதும் அறியப்படாமல் இருக்கிறது. அதன் பெயர் என்ன?

815. கோயில்களில் ஆண்டவனுக்கு முன்னால் கொளுத்தப்படும் கர்ப்பூரம் (சூடம்) எங்கு கிடைக்கிறது? எப்படிச் செய்யப்படுகிறது?

816. பதிமூன்று வயதுப் பையன், தன்னுடைய முதல் மலை ஏறும் முயற்சியின்போது 20,000 அடிகள் வரை ஏறினான். அவன் யார் என்று தெரியுமா?

817 ஜெட் விமானத்தில் லண்டனிலிருந்து நியூயார்க்குக்குப் போக எவ்வளவு நேரமாகும் என்று தெரியுமா உங்களுக்கு?

818 வாயு திரவமாக மாறும் போது குறைந்த இடத்தையே ஆக்கிரமித்துக் கொள்ளும். எத்தனை குறைவான இடத்தை?

819. ஸெட வெகாண்டே (Sede Vacante) என்றால் என்ன?

820. ஷேக்ஸ்பியரின் படைப்புக்களை முதன் முதலில் புத்தகங்களாக வெளியிட்டது யார் தெரியுமா?

821. உலகின் மிக உயரமான கட்டிடம் எங்குள்ளது?

822. அமெரிக்கர்கள் விளையாடும் பேஸ்பால் ஆட்டம் ஒரு பிரிட்டிஷ் விளையாட்டிலிருந்து தோன்றியது. அது எது?

823. நன்றாக வளர்ந்த ஒரு நெருப்புக் கோழியின் எடை என்னவாக இருக்கும்?

824. பதினாறும் நூற்றாண்டில் இங்கிலாந்துக்குத் தேவையான சர்க்கரை எந்த நாட்டிலிருந்து வந்தது என்று தெரியுமா?


825. அல்ஜீரியா நாட்டில் வாழ்பவர்கள் யார், யார்? பெயர் தெரியுமா?

விடைகள்: 803. இருதயத்தில். நான்கு அறைகளைக் கொண்ட இதில் மேல் இரு அறைகளுக்கு ஆட்ரியம்ஸ் என்றும் கீழ் இரு அறைகளுக்கு வெண்ட்ரிகிள்ஸ் என்றும் பெயர். 804. லிபியாவில். 805. மார்கோபோலோ. 806. பதினைந்து அடிகள். 807. உடலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சர்க்கரைச் சத்துக்கு இப்பெயர். 808. தவறு. நீருக்குள் மூழ்குபவருக்கு ரத்தத்தில் நைட்ரஜனால் ஏற்படும் ஒருவகை நோய்க்கு பெண்ட்ஸ் என்று பெயர். 809. இரண்டுமே. ஆழ்கடலில் வாழும் மிகச் சிறிய ஜீவராசிகள் இவை. 810. கூக்கபுர்ரா (Kookaburra) 811. இன்ஸுலின் என்ற பொருளை 812. எட்டி (yeti). 813. தவறு. பிளேடோ சாக்ரடீஸின் சீடர். 814. அமேஸான் பகுதி. 815. பார்மோஸாத் தீவிலுள்ள ஒருவகை மரத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வாலை வடித்து எடுக்கப்படும் ஒரு பொருள்தான் கர்ப்பூரம். ஸ்படிக வடிவமைப்புக் கொண்டது. இது தவிர வேறு பல செடிகளின் சார எண்ணெய்களிலிருந்து வாலை வடித்தும் கர்ப்பூரம் பெறப்படுகிறது. 816. மிங்மா (Mingma) ஒரு ஷெர்பாவின் மகன். எவரெஸ்ட் சிகரத்தை அடையும்போது உடன்சென்றவன். 817. லண்டன் விமானதளத்திலிருந்து நியூயார்க் ஐடில் வில்டு நிலையத்துக்குச் செல்ல 7½ மணியாகும். 818. வாயு உருவில் இருந்ததில் 1/6000 பகுதியை. 819. ஒரு புனித போப்பாண்டவரின் மறைவுக்கும் அடுத்த பதவி ஏற்கப் புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுப்பதற்கும் இடைப்பட்ட காலத்துக்கு இப்பெயர். 820. ஜான் ஹெமிங்கஸ், ஹென்றி கோன்டெல் என்ற இருவர் 1623ல். 821. நியூயார்க்கில். 822. ரவுண்டர்ஸ் என்ற விளையாட்டு. 823. 300 Cwt. 824. துருக்கி சாம்ராஜ்யத்திலிருந்து. 825. பெர்பெர் என்ற இனத்தவர்தான் அதிகம். அல்ஜீரியாவின் தேசிய இனம். இவர்கள் தவிர கிழக்கே இருந்து அராபியர்களும், தெற்கே இருந்து நீக்ரோக்களும் இங்கு குடியேறியுள்ளனர்.

தெரியுமே!

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக ஆர். அனந்தநாராயணனால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ● ஆசிரியர்: சதாசிவம்


சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

ஓரிடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலையும் உளவியலையும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உள்ளாகிய பிறகுதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 100 மைல்கட்கு ஒன்றுவீதம் ரிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ் ஸ்தாபனம்)
மதுரை

FDSSR-1712TMB